பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

மிஃறுஜா நாமா.

ஐயன்பேட்டை

மதாறு ஸாஹிபு புலவர்

அவர்கள் பாடியது.

இஃது

காயற்பட்டணம்

கண்ணஹ்மது மஹ்தூ முஹம்மதுப்

புலவரவர்களால் பரிசோதித்து

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜீ M. A. ஷாஹூல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹூல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1949

இதன் விலை] [அண 8.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

மிஃறாஜா நாமா.

காப்பு விருத்தம்.

ஆதியே சோதியே யடிமுடி யில்லானேநின்
றாதிறகு ஹல்லாநற் சுகமதைப் பெற்றுவந்த
ஏதிலா மிஃறாஜென்னு நாமாவை யினிதாய்க்கூற
வாதரா வுதவிசெய்வா ரறுகுமற் றூஹிமீனே.

தோங்கல்.

ஆடில்கடல்மலை மற்றுமுள்ள வழுகானவொரு சொல்லதனுற்
றேடியெழும்பதி னன்குலகுஞ் சிறந்த அறுசுடன் குறாசுதானு
மோடித்திரிகின்ற கதிர்மதியு முடுவும்பலவுயி ரானதெல்லாம்
நாடுநட்டம்போற் படைத்தவல்லநாயனே யெனக்கருள் செய்வாயே.

வாசமுறும்ஆத நபிதமையும் வரிசையார் நூஹு நபிதமையு
நேசஇபுறூஹீம் நபிதமையும் நிகழ்ந்துந்தாவூது நபிதமையு
மூசாநபிஈசா நபிதமையு மூலமுஹம்மது நபிதமையு
மாசையுடனே தான் சிந்தைதனி லனுதினம் புகழ்ந் தேற்றுவாமே.

இலட்க்ஷத்திருபத்து நாலாயிர நெடியநபிமார் களடங்கலையும்
பக்ஷமறவாத நபியுல்லாதம் பண்பாரசுஹாபி மார்களையும்
நிச்சய அபூபக்கரையு நீதிநெறிமாறூ வுமறி னையும்
நற்சொலெழுதிய வுதுமானையு நன்மையலியையும் புகழுவாமே. (3)

வரிசைபெறும் பாத்திமாநாயகம் வாகாயீன்றெடுத்து வந்த பாலர், தெரியுமசனுசைன் செல்வரானோர் சிறந்தஜைனுல் ஆபிதீனுடனே, பிரியஞ்சேர் நாலிமாம்கள் முதற் பேணுமொலிமார்கள் சாலிஹானோர்க், குரியபதங்களென் சிரசில்வைத்தே யுவந்துதினந் தோறும் பணிகுவாமே. (4)

நூறிலங்கிய மீறூளஞ்சேய் துவதும்பிஸ்மில்லா சாஹிபையும், சீர்கள்பெருகிய கலிபாவையுஞ் சிறந்தவுலமாக்கடமையும், போற்றிப் பேர்கள் பெருகியசக்றூப்பள்ளி பேணுவதிலுள்ள தீனவர்முன், ஏர்கள் பெருகிட மதாறுசாகிபேழை யடியேன்கவி யிசைத்தனனே.

திங்கள் நபியுல்லா கிஜறத்தான சிறந்தவாயிரத் தொருநூற்றின்மேல், புங்கமானதோர் அறுபத்தைந்திற் புகலும் வருடமாம்பிர சோற்பத்தி, சங்கைசேர் றமலான் முப்பதிலே சாற்று

மிஃறாஜு நாமாத்தன்னை, எங்கள் பிஸ்மில்லா சாஹிபுமுன் னேழை யடியேன் கவியிசைத் தனனே. (6)

ஆலந்தனிலுள்ள மூமின்களேயதிக முஸ்லிம்க ளானோர்களே, நீல மிஃறாஜு நாமாத்தன்னை நினைவாய் மனதுக்குள் மகிழ்ந்துதானே கூலமாகவே படித்தபேர்க்குங் குறுமொழிதன்னைக் கேட்டபேர்க் கும், ஆலநபிஷா அத்துண்டாமென்றே யாதிபெரியவ னுரைத் தனனே. (7)

வெண்பா.

முன்னொளியு லாகிவந்த முஹம்மது றசூலையெங்
கண்ணொளியி லாகிவந்த காரணரை—விண்ணுலகில்
அருசேரி ஹக்குடனே யாதையுடன் வந்த
வரிசைநபி யைப்பணிவேன் வாகாய். (8)

தோங்கல்.

ஹக்கநபியுல்லா வேரிரவி லறபாத்தெனுஞ்சபா மலைக் கிடையின், மிக்கசயனந்தான் செய்யும்போது விண்ணோர்ஜிபுரியீல் வந்திறங்க, ஒக்குநபி விழித்துப் பார்க்கும்போதே யுடையோன் ஜிபுரியீல் தம்மைக் கண்டார், திக்குத்திசை யெல்லாம் புகழுகின்ற திங்கட்கிழமையி னிரவினன்றே. (9)

அப்போதிருளுமாய் மின்னலுமா யதிர்ந்தவிடியுமா யிருந் ததுவே, நட்பிநாய்களுஞ் சேவல்களும் நாற்கால் மிருகமுங் கூவவில்லை மெய்ப்பாம்ஜிபுரியீ லொளிவானது மிகவுமதிகமா யிலங்கி னின்ற, செப்புஞ் ஜிபுரியீல்நபி யுல்லாக்குச் சிறந்தசலாஞ் சொல்லி யிருந்தனரே. (10)

வந்தசலாத்துக்குப் பிரத்திசொல்லி வானின்ஜிபுரீலைப் பார்க் கும்போது, அந்தமாகிய முசுக்களெல்லா மழகுமிலங்கின வெண்மை யாகப் பந்தியளவிரு சிறகானவை பச்சைமரகதம் பளிங்கியினால், விந்தையுட னிருகரங்கடானும் விளங்கப்பவளமு முத்தினாலே. (11)

பத்தியுடனவர் நெற்றிதனிற் பார்க்கிலிருவரி யெழுதிருந்த, தத்திலொருவரி லாயிலாஹ இல்லல்லாஹு வென்றேயெழுதிச் சுத்த வொருவரி முஹம்மதுற் றசூலுல்லாஹி யென்றறிந்ததுவே, ஒத்து மைச்சிறகு மயிர்க்காலெல்லா மொளிவாயிலங்கியே யிருக்கக் கண்டார். (12)

பறக்குஞ் சிறகெழு பதினாயிரம் பச்சைமரகதப் பளிங்கியினால் விரிக்குஞ் சிறக்கோ ரொருசிறகு விள்ளும்வழி ஐந்நூறு வருட மூண்டுஞ் சிறக்குந்திருமேனி பழகிலங்கத் தீனின் முஹம்மது திருமுன் வந்தார் உறக்கந்தெளியவே ஜிபுரியீலு முவந்து முஹம்மது நபிக்குரைத்தார். (18)

உண்மையுடையோரே யுமைக்கடுக உவந்துவரச் சொன்னு னிறையிவனும் வண்மையுடனேயான் மிஃறாஜுக்கு வரிசையுட னும்மை யழைக்கவந்தேன், நன்மையுளமொழி கேட்டபோது நாயனபியுல்லா பயணப்பட்டார், செம்மைஜிபுரியீல் தன்கூடவே சிறப்பாய நபாத்து மலைகடந்தார். (14)

மலையுங்கடந்தபின் மீக்காயீலும் வந்தங்கெதிரிடக்கண்டபோது கலைகள் துலங்கவே மிக்காயிலும் கனமாயிலங்கிட அவர்க்குப் பின்னே, விலைகள் மதியாத புறாக்குத்தன்னை வெண்மையுடனவர் கொண்டுவந்தார், தலைமையாகிய பரியானது சார்தமாக விருக்கக் கண்டார். (15)

முதுகுகோவேறு கழுதைபோலே முகமுமனிதரின் முகம் போலவே, பதிவாயதன்மேனி வெண்மயதாம் பார்க்கிலதுதானே குதிரைபோலாம், அதனினஞ்சது புலிநெஞ்சுபோ லானைக்காலது போன்றதாலாம், புதியவாலது மாட்டின்வால்போல புறாக்கின் வடிவது தானுமுண்டே. (16)

சிறந்தமுன்நெற்றி புறாக்கதுக்குச் சிவந்தமாணிக்கம் போலி லங்கும், பறந்தவிருகண் ணுக் கிடைதனிலே பார்த்தேன்றிருக்கலிமா வெழுதி, விரிந்தசெவிரண்டு மரகதத்தால் மேனிமுது மூக்கு வயிடூரியம், நிறைந்தபடியெல்லா முத்திஞலே நீலப்பசும்பொன்னு லேணியுமே. (17)

அணிந்த குதிரையைச் ஜிபுரியீலு மலங்காரமாகக் கொண்டு வந்து தணியாக்கரத்தினுற் பரிமுகத்தைத் தடவியாலணைத்திடும் போதுதான், அணிந்தகுதிரையு மனுமானித்துச் சோடித்தணிகலங் கலகலென்னச், சினந்தேடியது போல்முழங்கத் திடுக்கிட்டு நபி சோரநின்றூர். (18)

பயந்தபோதங்ஙன் ஜிபுரியீலும் படியையுறுதியாய் பிடித்துக் கொண்டார், நயந்துமிக்காயீல் படிதாங்கினுர் நல்லறாக்காயீல் பின் பிடித்தார், வயந்து நபியுல்லா புறாக்கிலேற வரிசைப்பாதத்தைப் படிமேல்வைத்தார், பயந்து குதிரையு நடுநடுங்கிப் பதிவாயிடங் கொடா விலக்கியதே. (19)

அங்ஙன்ஜிபுரியீல் புறாக்கைநீக்கி யானவதிசயந் தனைக் கேட்கச் சிங்கப்புறாக்கது சொல்லுமப்போ தீனின் முஹம்மதே கியாமத்து நாள் பொங்குஞ் சுவர்க்கத்துக் கேகும்போது புதியபுறாக்கொன்றைத் தேடாமலே, அங்ஙனென்மீதி லேறிப்போக வடியேன் றனக்கு வாக்கியவேண்டும். (20)

வாக்குநபியுல்லா புறாக்கதற்கு வழுவாக்கியர் தான்கொடுத் தார், வாக்குக்கொடுக்கவே புறாக்குத்தானும் மண்மேலடிதோயப்

பதம்பணிந்து, நோக்கும்படியதிர் பாதம்வைத்து நூறுநபியுல்லா
புறாக்கேறினார். நீர்க்கமுடனவர் புறாக்கிலேறத் தீன்தீன் முஹம்
மதென்றோதியதே. (21)

ஏத்த குதிரையும் நபியுல்லாவை யிதமாப் புகழ்ந்து நின்றே
யுரைக்கும், மூத்த நபிமார்களொருவன் முதுகுதனிலென்று மேற
வில்லை, வாய்த்த நபிமார்களான பேருக்கும் வரிசைத் தலைமையாய்
வந்தவரே, காய்த்த பதவிப்பான் பெற்றோனும் பால்காசீ முஹம்மதே
முஸ்தபாவே. (22)

பரியுமிப்படி நபியைப் போற்றிப் பகரச் ஜிபுரியிலதனை நோக்கி
விரியும் பரியே நீ பேசவேண்டா மீண்டு நடவென நடந்ததுவே
யூகாஜிபுரீலு நபியைப் போற்றி யுகந்து குளிர்ந்தகங் களிடத்திடவே
அரிய பலபல ஹதீது சொல்லி ஆலநபியுல்லா நடந்தனரே. (23)

நடக்கும் வழிதனிலொரு மலைதான் நயனந்தனிற் காணத்
தோற்றியதே, பிடைக்குக் கதிர்மதி யுடுக்களிவை பெரிய மலைக்
கொன்றுந் தானொவ்வாது, குடைக்கு ளெழும்பிய மலைக்கிடையில்
குளிர்ந்த நிழலான மரங்களுண்டும், படைக்கு மலக்குகள் மலைக்கு
வட்டிற் பகருந்தசுபீஹு ஓதக்கண்டார். (24)

இந்த விடத்தினில் றக்ஆத்திரண்டு இறக்கித் தொழச்
சொன்னார் ஜிபுரயீலும், அந்தமுடனங்ங னிறங்கிநின்று அல்லா
தனைப்போற்றித் தொழுதுகொண்டு, சிந்தை மகிழ்ந்து நல்லதுவாவு
மோதிச் சிறந்த பாத்திஹாவு மகமாதியே, வந்த புறாக்கத்தின் மீதி
லேறி வணங்கு மலையிதின் பேரேதென்றார். (25)

நல்லதுரிசினா மலையீதென்று நாயன் ஜிபுரியீல் நபிக்குரைத்தார்
வல்லநபிமூதர் பயஹாம்பர்தான் வசனிப்பாதியா தவமிஃதே அல்லா
தனைக்காண வேண்டுமென்றேயரிய மூசாவும் பகரும்போது இல்லல்
லாஹுதன் ஒளிவைக் காட்ட விலங்கும் போதவர் மயங்குந்
தவம். (26)

சகல காரணங் தனையுங்கண்டு ஜாதிக்குதிரையை நடத்தும்
போது, அகலமாயொரு வயலைக்கண்டே யங்கேஜிபுரியி லிறங்கச்
சொன்னார், புகலுமதனிடத்திறங்கிப் பார்க்கப் பொருந்த விளாக
விருந்ததங்கே, முகிலார் ஜிபுரியில் றக்ஆத்திரண்டு முடுகித் தொழச்
சொன்னார் தொழுதனரே. (27)

தொழுது முடிந்தபின் புறாக்கிலேறிக் தோழர் ஜிபுரியீல்
தன்னை நோக்கித், தொழுத்தல மகினுமங் கேட்கத்துய்ய மறியந்
தானீசர் தம்மைப், பழுதொன்றணுகாம லீன்றெடுத்த பண்பாந்
தலமிஃதெனவுரைத்தார், முழுதும் ப்ல புதுமை கண்டு மோகப்
பரியதை நடத்தினரே. (28)

வெண்பா.

அன்ன முஹம்மதருமா தரித்த வானவரும்
என்ன ஜிபுரீலுடன் புறுக்கி—அந்நெறியில்
மருட்டுத் துணியா மாபைதனைக் காட்டும்வல்லி
திருட்டாக வந்தாள் சிறந்து (29)

தோங்கல்.

வையம் புகழ்பெற்ற நபியுல்லாமுன் வழியில் வலதுபால் திசை தனிலே, யுய்யுமாறுசத்த முஹம்மதரே யுவந்திங்கொரு வார்த்தை கேட்க வேண்டும், பொய்யா யெழும்பிய சத்தங் கேட்டு புகலுஞ் ஜிபுரியில் நபிக்குரைத்தார், தையலவள் பக்கந் திரும்பாதையும் தானே நடவு மென்றே நடந்தார். (30)

தள்ளி நடக்கும் போதிடது பாலில் சத்தமொருமொழி தானெழும்ப, வள்ளல் முஹம்மதே நற்காரியம் வளமர்ச் சாற்று கிறேனில்லுமென்க, கள்ளிதனைப் பார்க்க வேண்டாமென்று கடுகஜி புரியில் நடப்பீரென்றார், வெள்ளி நடக்கும்போ தொருமடவாள் வேகமாய் வந்தங் கெதிரே நின்றாள். (31)

தலையும் விரித்திரு கையை நீட்டித் தாவடமுத்து மாலைபூண்டு, முலைமார்பையுந் தெரியக்காட்டி முகமுமிலங்கிட முதகணிந்து, வலையிலகப்படுந்திள நினைந்து வரிசை நபியென்னைப் பாருமென்றாள், நிலைசேர் ஜிபுரியில் நபியுல்லாவை நெருங்கிப் பேசாமல் நடப்பீ ரென்றார். (32)

அன்று நடக்கின்ற போதங்ஙனே யச்சமா யொரு சத்தங் கேட்டுச், சென்று ஜிபுரியில் நடப்பீரென்றார் சிறந்து நடக்கையில் மூவர் வந்தார், கண்டவுடன் சந்த மூன்றுபேரும் கருதி சலாஞ் சொல்லித் திருமுன்னின்றார், ஒன்றேயொரு ஜவான் ஒரு கிழவன் ஒருவனடுத்தா மூன்று பேரில். (33)

உமக்குச் சரிபோன மனிதனுக்கே யுரைத்த சலாத்துக்குப் பிரத்தி சொல்லும், தமக்குச் சரிபோன வாலிபர்க்குத் தானே நபியுல்லா பிரத்தி சொன்னர், இமைக்குமிவ்விடம் விட்டேகும் போது இசைந்த வொரு பசு தனையறுத்தே, யமைக்குமது தன்னை நான்கு கூறு ஆகச் செய்திடத் தானுங்கண்டார்.

முதலிலொரு கூறு விலாவெலும்பு முட்டுந் தலைக்கோர் பங்கு போட்டார், இதனிலொரு பங்கு உதிரமோடே யியம்புங்குடல் சாணியொரு கூறிட்டார், அதனிலொரு கூறு வாலுந்தோலு மகன்ற ரம்பையோர் பங்கு செய்தார், சதுரா யொரு பங்கு நல்லி றைச்சிதனைச் செய்தவை நான்கை நால்வர் கொண்டார். (35)

அவுடர்த்னைவிட்டு நடக்கும்போதே யவனிதனிலிருந் தொரு சேவலும், குவடுபோலவே முளைத்தெழும்பிக் கொம்பு முன்வெளிப் பட்டுவந்து, தவிராதது பின்னும் பூமிக்குள்ளே தான்புக்கக் கொம்பு புகுதாமலே, யிவிடந் தனினின்று மயங்கின தாமிந்தப் புதுமையானதையுங் கண்டார். (36)

ஆக்கநபியப்பால் நடக்கும்போதே யங்ஙனெதிரொரு தோப் பைக்கண்டு, பார்க்கும் போதங்கே யாடுமாடும் பசியுந்தவனமாய் வயிறொட்டியே, நோக்கமுடன் சிவன் போவதுபோல் நொந்தங் கொடுங்கியே யிருக்கின்றதைத், தீர்க்கமுள்ளநபி யிப்புதுமை சிறப்பாய்க் கண்டுபினடந்தனரே. (37)

வாடையுடனப்பால் நடக்கும்போது மைதானுகிய வொரு கானகம், வாடுஞ்சூடான சுட்டுமூக வழியொன்றிருக்கத் தான் கண்டதிலே, ஆடுமாடுகள் பலசீவனும் அங்கங்குளிரவே மேய்ந்த வைகள், நாடு மலங்காரத் துடன்செழித்து நன்றாயிருக்கிற விடமுங்கண்டார். (38)

ஏறும்பரியப்பால் நடக்கும்போதங் கேகும்வழியதில் சிலரைக் கண்டார், பாரிலவர்பல பயிர்களிட்டு பலன்களுண்ணுமல் பசியால் வாட, வேறுசிலரைத்தான் கண்டாவர் வெண்மையுள நல்லபி றைச்சி தள்ளிக், கூறும்படிக்கிப்பா றிறைச்சிதின்று கோலந்தனை செய்யுங் கொடுமை கண்டார். (39)

காரணமுள்ள நபியுல்லாவுங் கண்டேய தற்கப்பால் செல்லு போது பூரணமுள்ள நல்வாசமாம் புதியமணவீசும் புதுமை கண்டார் ஆரணமுள்ள ஆலநபி யாசையுடன் அல்லா தனைப் புகழ்ந்து நேராயதற் கப்பால் செல்லும்போது நிறைந்த வொளி வான மாடங் கண்டார். (40)

மலக்குந்தாமுமாய் நடக்கும்போது பைத்துல் முகத்தீசு பள்ளிகண்டே, யிலக்கமுள வாசற் படிமீதினி லிறங்கி வலதுகால் வைக்கும்போது, நலக்கமுள்கல்லு சத்தங்கூற நபியுமுடுக்கத் தன் காலெடுத்துத், துலக்கமுளகல் லேசத்தமேது தொகுத்து நீ யெனக் குரைப்பா யென்றார். (41)

பளிங்கு வயிரக்கற் பகர்ந்துறும் பாதம் படவோ னுதித்ததிப் போ தொழுங்கா மறுதாருயிர வருஷமுண்டு முறுதியாகவிந் நாள் மட்டுமே, புழுங்கியானிங்ஙனிருந்தேனென்றன் புகலும் பாவத்தை தீர்ப்பாரில்லை முழக்கியநல்ல நுமதுபாதம் முஹம்மதே யென்மேற் படர்த் தீர்ந்ததே. (42)

வாகார்நபியுல்லா பள்ளிக்குள்ளே வந்து நடக்கின்ற வப் பொழுது ஆகாசந்தனிற் ருனுதிக்கு மானகியாமத்மி னாளளவும், மேகஜிப்ரயில் பள்ளித்தூணை யுருகவிரலினுற் றுன்றுளைத்துத், தாக முடன் பரியதனைக்கட்டி தாமும் நபியும்மா யுட்சென்றுரே. (43)

வானின் ஜிபுரியில் வாங்கு சொல்வ ரிசைநபியுல்லா பிரத்தி சொன்னார் மூன்று நூறுடன் பதின்மூன்றான முறுசலின்களு மற்றுமுள்ள ஆனவொருலட்ச பத்துநாலாயிரஞ் சின்ன நபிமார் களுந் திரேணங்கிடச்செய்த அன்பியாக்களுஞ் சிறந்த வொலிகளு மிருக்கக் கண்டார். (44)

. நலமுளதிரு நபியுல்லாமுன் னெல்லாநபிகளு மெதிரேவந்து காலமுடனே தாம் சலாமுரைத்துக் கோமான் முஹம்மதைக் கொண் டாடியே, பாலங்கடத்திடு முஹம்மதரே பார்க்கத்தவம் பெற்ற நாயகமே, ஆலநபியே யெங்களை நீர்தானே யன்பாய்த் தொழுவியு மென்றோதினார். (45)

ஒளிவு நபியுல்லா ஆதந்தன்னை யுவந்துதொழுவியு மென்று ரைக்கத் தெருவுமகனாரே முஹம்மதீரே கிறந்து நமதுபின் பற்றித் தொழ, வழிபார்த்திருந்தோமே நாங்களெல்லாம் வரிசைநபியெப் போவருவாரென்றே, ஒளிவுமுஹம்மதே நடுவிளக்கேயு வந்து தொழுவியு மென்றுரைத்தார். (46)

ஆதிமுஹம்மது இமாமாகவே யங்ஙன் தொழுவித்தார் ஜமா அத்தாகவேத நபிமார்க ளனைவோருந்தான் மிகவும் பின்பற்றித் தொழுதுங் கண்டார், நீதிநெறியுடன் தொழுத பின்பு நெடியது வாவுடன் ஆமீன் கூறிப்பாத கந்தீர்க்குந் தஸ்பீஹுடன் பாத்திஹா வோதியிருக்கும்போதே. (47)

திருந்தநபியுல்லா வும்மத்தோர்க்குஞ் சிறந்த அன்பியா லனைவோருக்கும், வருந்தித் துவாச்செய்தார் ஷபா அத்துக்கு மன்றாட்டந்தர வேணுமென்று, கருவிலுருச்செய்யு மிறையிடத்தில் ஹாஜத்துடனாடிக் கேட்டுக்கொண்டார், பருவஜிபுரியில் தான் மறைந்து பாங்கிலோரு நொடி தன்னில் வந்தார். (48)

வடிவுநபியுல்லா வேவழியில் வரும்போதாகிய சத்தங்கள்தான் இடதுவலதிலு மெழும்பினது எகுதி நஸ்றானி சத்தங்களாம் இடையில் ஒருகள்ளி வந்தது தானிபுலீ செனூர்துனியா மருட்டி புடயிலவனை நீ பார்க்காமலே போக்கி நடந்ததே நல்லதென்றார்.(49)

திரும்பிவளுடன் பேசினீரால் தீபால்நரகத்துக் கிரையதாக வெருமையுடனும் மத்தானோர்களை வேகவிடுவா னென்றியம் பினரே அருளி லொருவச்சமான சத்தமஃத தெனவென்றார் நரகத் துள்ளே விரைந்தங் கொருத்தன்மேற் கல்லெறிந்த விசையதாகிய சத்த மென்றார். (50)

மூன்றுபேர் வந்து சலாஞ் சொன்னவர் மூவரும்மத்தா னோர திலே மீண்டும் வாலிபக் காரனுக்கு மிகவே பிரத்திரீர் சொல்லா விட்டால் மாண்டமனு வெல்லாம் ஈரென்றறுவதைக்கும் நரகத்தில் வருத்த மாவார், ஆண்டமுஹம்மதே யென்று வானரருள் முஹம் மது தாமகிழ்ந்தார். (51)

பசுவையறுத்தன்மன் கூறுபோட்டும் பாங்காய் விலாக்கொடி யெலும்புக்கொம்பை, யிசைந்துகூறிட்டங் கதையெடுத்தோ னீனுன் குதியலானவனு, மீசையுமுதிரமுஞ் சாணியையும் மேவி யெடுத்ததை மசூதியானேன், குசிலநரம்புடன் வாலுந்தோலுங் கூட்டியெடுத்தவன் நஸ்றுனியாம். (52)

நல்லவிழச்சியை யெடுத்தவன்தான் நல்ல அகிலான சுவர்க்க வாதி வல்லவொருசேவல் கொப்புடனே வந்து வெளியேபின் செல்லாமலே, மல்லலானது நற்புத்தியை மறந்து துர்ப்புத்தியதனைச் செய்து' செல்லவதை மறைந்திடவாகாத திருடனவனென்றே தானுரைத்தார். (53)

பின்பு வழியினித் குளிர்ந்ததோப்புப் புல்லும் நீர்களுந் தானி ருக்க, வெம்பியதிக்கா யிறைத்திருந்தா விப்ரமதுதன்னை யுரைக்கக் கேண்மோ, அன்பாகியநல் தீனதிலிருந்தே யான்செயற்சொற் களவையைவிட்டு வம்புபழங்கதை வீண்செயலே வாரியெடுத்திடுங் கொடியோரென்றார். (54)

சூடாய் கொதித்திடுங் கானகத்துட் டுள்ளிமேய்கின்ற காலி யவை, வாடிமெலியாமற் பொருந்திருந்த வளமையதுதன்னை யுரைக் கக்கேண்மோ கேடாந்துனியாகி லிருந்தாகாத கெட்டசெயல்களை யகலவிட்டுத், தேடுஞ்செகில் நலந்தனைப்பிடித்துச் செய்வோரவர் கடன்பதவியென்றார். (55)

அன்று கட்டன்று அறுத்துண்டவர் அவராரெனக்கேளுந் துனியாவிலே, வென்றிபீசபீல் வெட்டுவோரும் விரும்பியெளி யோர்க்கு கயிர்கொடுப்போர், நன்றுமிறைச்சிக ளிருக்கப்பொல்லா நாற்றவிறைச்சியைத் தின்றவர்கள், பெண்டாம் பெண்ஜாதி தானி ருக்கப் பெருத்த ஹறுஞ்செய்யும் பாவியென்றார். (56)

மணக்கும்பரிமளம் வீசுமதின் வகையாதென நபி கேட்ட தற்கு, இணக்கமுடன்கயிர் கொடுப்போருக்கு இறங்கும்நன் மண மதுவாமென்றார், துணைகொள் ஜிபுரியி லிவைகளெல்லாஞ் சொல்லி முடிந்தபின் மறைந்துபோனார், வணக்கமுள்ளநபி யுல்லாவுந்தான் வல்லபெரியோனைப் புகழ்ந்திருந்தார். (57)

வெண்பா.

ஆல நபியும் ஆதநபி மூசாவும்
பால் ரீசாவும் பகர்ந்திருக்க—கோலமுடன்
ஜிபுரியில் தங்கூடச் சிறந்த மலக்கவர்கள்
தபக்கான தேர்திந்தார் தாம் (58)

தோங்கல்.

தலைமைமலக்குகள் கொண்டுவந்த தபக்கை நபியுல்லா திறந்து பார்த்தார் பலமதாகவே கள்ளுந்தேனும் பாரிலும் நீரிவை நான்

குங்கண்டார் நவமதாகவே யிதனிலொன்றை நன்றுய்ப்பருகுமென் றிறை யுரைத்தான் நிலமையாகிய நபியுல்லா தாம் நினைந்து பால் தன்னை பருகினரே. (59)

மலக்கு ஜிபுரியில் நபிபாலுண்ண மறுகபாவென்றே மனமகிழ்ந் தார், துளக்கமுடபாலிற் கொஞ்சமிஞ்சத் தூக்கிச் ஜிபுரியீல் கையில்கொடுத்தார், கலக்கமிலாவதை ஜிபுரீல்வாங்கி நபியே நீர் கொஞ்சம் பால்மீந்ததாற், சிலுக்கு ஈரகத்தி லும்மத்தோரிற் சிறிது பேரைப்போட்ட தாபுசெய்தான். (60)

எல்லாப்பாலையுங் குடித்திராகி லெல்லாவும் மத்துஞ் சுவர்க்க மாவார், சொல்ல ஜிபுரியீ லுரையைக்கேட்டுத் துய்யநபியுல்லா பாலைக்கேட்டார், வல்லஜிபுரியீ லதற்குரைத்தார் வரைந்தவுலகுக்கு ளெழுத்தின்படி, யில்லையினிக்கேட்க வேண்டாமென்றே யேகனபி யுல்லா தமக்குரைத்தார். (61)

தரித்த நபியுல்லா ஜிபுரியீலுமாய்த் தங்கும்பள்ளியி லிருந் தெழுந்தே, யுரித்தாம் நபிகட்கு சலாஞ்சொல்லியே யுவப்பாயிருப் போரும் வெளியேவந்து, உரைத்தநபியுல்லா பாதைநோக்கி யுவந்து நடக்கும்போ தவ்வழியில், பெருத்தபுலியொன்று முன்னில் வந்து பெருக்கவாய் பிளந்திருக்கக்கண்டார். (62)

அஞ்சிப்பயந்திட வவ்விடத்தி லானவதிசயங் கண்டபோது செஞ்சொல் ஜிபுரியீல் மொழிந்தபடி சிறந்த நபியுல்லா கணை யாழியை மிஞ்சுமதுவாயிற் போட்டிடவே விள்ளும்புலியது நீங் கினது மஞ்சுகுடையிடும் நபியுல்லாவும் வாகாயதற்கப்பால் நடந் தனரே. (63)

பெரிதாயொருமலை தன்னைக்கண்டு பேணியதிலேறிப் பார்க்கும் போது, உரியமலக்குகள் சஜதாவிலே யுரைக்குந்தஸ்பீஹு ஓதக் கண்டு, விரியுஞ் ஜிபுரியீல் றக்ஆத்திரண்டு மேவித்தொழச்சொன் னார் தொழுதனரே, பிரியமுடனந்த வலைக்குவட்டிற் பேற்றி ஜிபுரியீல் சத்தமிட்டார். (64)

தத்தமேதென்றால் முன்வானத்தின் தலைமை மலக்கையுந் தான் கூப்பிடச், சுத்தமாகிய றாக்காயிலை சுவனமலக்குட னாறு யிலை, வெற்றி மிஃறுஜு ஏணிதன்னை வேண்டிக்கொண்டுவரச் சொன்னதாகும், பத்து நூறுட னேழாயிரம் பாரமலக்குகள் தாங்கூடியே. (65).

ஆணிக் கனகமாஞ் சுவனத்திற்போ யதிலுள்ளேணியை யெடுத்து வந்து, பேணியிறக்கியே கீழேவிட்டார் பெரியமிலைகண்டு சிவந்த பொன்னும், ஏணியதற்குத்தான் ஐம்பத்தைந்து இருந்தபடி யெல்லா மாகதமாம், பூணவொருபடிக் கொருபடிதான் புகலவே நூறு வருடமுண்டே. (66)

நேர்மையாகிய முதலாம்படி நீலமரகத முத்தினாலே கூர்மையாகிய இரண்டாம்படி கூறும் பவளத்தினால் பொன்னினாலே ஏர்வையாகிய வைம்பத்தைந்து இருக்கும்படி யெல்லா திமின்படியே பார்வையாகிய நபியுல்லாவைப் பகருஞ் ஜிபுரியீலழைத்துவந்தே. ()

முதலிற்குருனோதி வலதுகாலை முன்னர் வைத்ததிலேறும்போது இதயமகிழவே மலக்குகள் தாமினிதாயாலத்தி தானெடுத்தார், மதியம் போலவே பிறசூலுல்லா மற்றும் பலபடி தானேறினார், அகில மலக்குகள் படிக்கும்படி யனேகம்பேர்வந்து போற்றி செய்தார். (68)

இந்தப்படியே தாணைம்பத்தைந்து இசைந்தபடி யெல்லாங் கடந்த பின்பு, அந்தத்தலத்திணிலொரு கடலுண்டதனினுயிரெல்லா மடங்கி விடும், விந்தை யுடனங்ஙொரு மலக்கு மேவி நிற்கிறாவர் வலுப்பம், சிந்தப்பதமெழு பூமிக்குங் கீழ்சிரசு அறுகமுட்டி நிற்கக் கண்டார். (69)

இவ்டவிம் விடுத்தப்பால் நடக்கும்போதே யிடை முன்வானத்து வாசற் கண்டார், அவிடந்தனில் பூட்டு பூட்டிக்கொண்டே யனே கமலெக்கு களிருக்கிறார்கள், குவடு பூட்டின்மேல் கலிமாவது குறித்தங்கெழுதியே யிருக்கக்கண்டு, சவடுமொருவர்தான் சுகமா வெனுந்தடியும் பிடித்தங்கே நிற்கக்கண்டார். (70)

பெரிய மலக்கந்த வாசல்கிட்டப் பேதை பீடுத்திடச் செய்யுமவர், எரியு முடுக்கனைத் தான்பிடுங்கி யிபுலீசவன்மேலே யெறியக் கண்டு, பிரியமாகவே முன்வானத்தில் பெரியவாசலில் செல்லும்போதே, யுரியவானவர் வாசல்காப்போ ருறுதியுடனங்ஙன் பேரைக் கேட்டார். (71)

பேசுஞ் ஜிபுரியீல் நாமஞ்சொல்லப் பெரியவாசலை திறந்து விட்டார், வாசமுடனுள்ளே யிவர்கள் சென்று வலமுமிடத்தினும் பார்க்கும்போதே, யூசிதனை வைக்க விடமுமின்று யொப்பாய் மலக்குகளிருந்தனர்கள், நேசமுடனதி லொருமலக்கு நெடி வலுப்பமா யிருக்கக்கண்டார். (72)

பொன்னின் குரிசின் மேலிருக்குகின்ற புகலுமவரிட வலுப்பங் கேளீர், விண்ணும்புவியெழு மலைகடலை மேவியெடுத்தவர் விழுங்குவாரால், பன்மையவர் வாயில் கடுகைப்போட்ட பரிசு போலவே தானிருக்கும், முன்னில் நபியுல்லா சலாமுஞ் சொன்னார் மொழியும் பிரத்திதானவருஞ் சொன்னார். (73)

உசந்த மலக்கவர் நபியைப் பார்த்தங் குவந்து புரிசமாயிருக்கும்போது, வசந்த நபியுல்லா பார்க்கிலவர் வலத்திடத்திலு முன்னும் பின்னும், பசும் பொன்னாகிய சிங்காசனம் பக்கவாயிர மிருக்கக்

கண்டே, யிசைந்தே யவரைக் கானிவையாருக்கு இயம்பு மெனக் கேட்கவவருரைத்தார். (74)

துய்யமுஹம்மதே நம்மத்தோர்க்கு சுபுகானிது வெல்லாம் படைத்தானெனச், செய்ய் நபியுல்லா நீரிங்ஙனஞ் சிறந்தே யிருக் கின்ற வகையேதென்ன, வையம் படைத்தவன் முன் வானத்தின் வரிசைத் தலைமையா யிருக்கச் சொன்னான், மெய்யினொளிவுள்ள வானவகுர் மேன்மைத் தலைமையாய் வைத்தானென்றார். (75)

முத்துப் பதித்திங்ஙன் நூறுமாளிகை முறையாயிருப்பவை யாருக்கென, வெற்றிவிருகள்ள இம்றான் மகள் பீபீமறியம் ஆசியாத மக்கும், நற்றவமுள்ள குவைலிதீன்ற நாயகமான கதீஜாவுக்கும், சுத்த முளபீவி பாத்திமாக்கும் சொந்த மாளிகை தானுமென்றார்.

உரைத்த போதங்ஙனின்று கொண்டே யுலகந்தனை நோக்கிப் பார்க்கும்போது, குறித்து விளக்கதைத் தூக்கிவைத்த கூர்மை போலவே தானுங் கண்டார். பெருத்த மலைபினும் வலுப்பமாகப் பெரிய சேவலைத்தானுங்கண்டு, விரித்த சிறகெல்லா முகத்தினாலே விழிகளதுரண்டு மாணிக்கத்தால். (77)

நிறமும் பவளம்போல் கால்கள் ரண்டும் நீலமரகதத் தலையு மூக்கும், சிறகு மிரண்டுமே லொளிவினாலே சிங்காசன மொன்று தானிருக்கத், தரித்தே யதற்குள்ளே யொருமலக்குத் தானே யிருக் கிறார் வணங்கிக்கொண்டு, விரிக்குஞ் சிறகுதானிரவி போல வெண் மையாகவே யிருக்கக்கண்டார். (78)

சேவலதுதானும் பின்சாமத்திற் சிறந்த சிறகையுந் தான் விரித்து, நாவு மலக்குகள் கலகலென நன்றாயுரைத்திடுந் தசுபீஹதின், ஏவற்படி செய்யும் சத்தங்கேட்டே யிந்தப் புவியினுட் சாவலெல் லாம், கூவுந்தஸ்பீஹு செய்து வந்த கோமான்றனைத் தொழு வெழுப்பிடுமே. (79)

பாவமுலகத்தில் நீங்கள் செய்த பாவம் போக்குங்கள் நடு வறிந்து, சாவுதனக்கிடம் வந்துபோச்சு சயனந்தனைத்தள்ளி வணங் கப்போகும், நோவும் பிணிகளும் சங்கடமும் நோக்கி வருமுன்னந் தொழுவீரென்று, மேவுமிறைபவ னேவற்படி விண்டு சேவலுங் கூவுமன்றே. (80)

மெச்சியதற்குப்பின் பார்க்கும்போது வேனிவடிவதா யொருவர் தானும், பச்சை சருபந்துக் குப்பாயமும் பாங்கா யணிந்து தானி ருக்கக்கண்டு, இச்சையுடனவர் வலப்பாகம் பார்த்தி தயங்கு ளிர்ந்துதான் பிரிசமாவார், அச்சமுடனது ரிடப்பாகம் பார்த் தருண்டுமனமது சலித்திடுவார். (81)

புதுமையிது தன்னை நபியுல்லாவும் புகலுஞ் ஜிபுரியீல் தம்மைக் கேட்கச், சதுரிலொருவர்தான்சுவர்க்கம் பூதச் சங்கையுடன் ஆதம்

பிரிசமாவார், விதனமாகிய நரகம்புக்க மெலிந்து ஆதமும் சலிப்ப தாவார், இதனைநபியுல்லா தானுங்கண்டே யின்பமுடன்சென்று சலாஞ் சொல்லினர். (82)

பகர்ந்தசலாத்திற்குப் பிரத்திசொல்லிப் பார்த்துமுஹம்மதை யருகிருத்தி, யுகந்துநபிபைத்தான் முத்தமிட்டு ஒதுஞ்சலவாத்தைத் தானுங்கூறி, முகரும்பரிமளந் தானும்பூசி முஹம்மதுநபி தம்மைப் போற்றிச், சுகமாய்த் தொழுவிக்கச் சொன்னாப்போ தொடர்ந்து தொழுவித்தார் தொழுதனரே. (83)

தொழுதுபாத்திஹா தானுமோதித் துவாவுங்கேட்டுப் பின்ன விடம்விட்டு, எழுந்தகிருபையாய் நபியுல்லாவு மேநடக்கும்போ ததற்கப்பாலே, பழுதொன்றணுகாத விரும்பினாலே படையுண்டான திரண்டாம்வானம், முழுதுங்காரணம் பகரொண்ணாத முடியாய்ப் புதுமையு மதனிற்கண்டார். (84)

என்றபுதுமையுள்ள வானந்தனில் எஹியாநபியங்க னிருக்கக் கண்டார், அன்றங்கவரொரு அழகாகவே யமர்ந்தகுருசின்மேற் றானிருந்தார், என்றும்பதினாறு வயதாகிய யிலங்கும்நபிமுன்னே சலாமுரைக்க, நன்றாய்ச்சலாத்திற்குப் பிரத்திசொல்லி நபியுல்லா தமைப் போற்றிசெய்தார். (85)

அமுதமுஹம்மதற்கு ஜிபுரீல்தானு மழகாய்த்தொழுவிக்கத் தானுரைத்தார், குமுதநபியுல்லா இமாமாகவே கூடித்தொழுது பின் னடக்கலுற்றார், திமிர்தமாகிய மூன்றும்வானஞ் சென்று வாசலி னுட்புகுந்தார், நிமிர்தமாகவே மலக்குகளும் நிசமாம்பூசுபு மிருக்கக்கண்டார். (86)

பின்புவவ்விடத்தில் முத்திணாலே பெரியகுரிசொன்று தானி ருக்க, வன்பாயதக்குமே லொருவர்வானு மகண்டமுகமுமாய் நெடியோருமாய்ச், செம்பொன்தகைமைபோ லிருகாமுஞ்சிறந்த சருவந்துமணிந்திருந்தார், நண்பாயொருவர்தா னவரருகே நன்றா யிருக்கிற திறமுங்கண்டார். (87)

துணைவராகிய ஜிபுரியீலே சொல்லுமிவர்களா ரென்றபோதே, யிணையார்தாவூது நபியோடுமேயிசைந்த சுலைபுமானபிதாமென்றார், மணமார்நபியுல்லா கேட்டபோது வாகாயெதிர் எதிர் சென்று சலாஞ் சொல்லினர், நினைவாம் சலாத்துக்குப்பிரத்திசொல்லி நீதி முஹம்மதைப் போற்றிசெய்தார். (88)

வந்தஜிபுரியீல் நபியைத்தானே வணங்கித் தொழுவிக்கச் சொன்னபோது, சொந்தநபியுல்லா லவர்கள்முன்னைப் தொழுவிக்கே னென்று சொன்னார், சந்தரவதன முளநபியே நீரேதானி மாமத்துச் செய்யுமென்றார், கொந்திலாவிய றசூலுல்லா கூடி முன்னின்று தொழுவித்தாரே. (89)

வணங்கிநபியுல்லா தொழுதுபின்பு வல்லோனிடத்திலே துவா விரந்தார், இணங்கும்பெரியோனே யென்னும்மத்தோரி னெல்லாப் பிழைகளுந் தான்பொறுத்து, மணங்கள்வீசிய சொர்க்கபலன் வரிசையுடன்மிக நீகொடுப்பாய், தவங்கள்பெறுநபி துவாவுஞ்செய்து தாமுஞ்ஜிபுரீலுமாய் நடந்தார். (90)

நடந்தநபியுல்லா சொல்லும்போது நாலாம்வானத்தை தானுங் கண்டு, படர்ந்தசிவப்பான மாணிக்கத்தால் படையுண்டானது நாலம்வானம், கடந்ததேயதற்குள்ளாய்ப் பார்க்கும்போது கதிரோ னெழும்பியா வாறுகண்டாய், அடர்ந்துகூறு னிமார்கள்வந்து அன்பாயாலத்தி தானெடுத்தே. (91)

மஞ்சுகுடையிடு முஹம்மதரே வரிசையப்துல்லா மதகளிறே, அஞ்சுமாறையும் செஞ்சுவர்த்த ஆதிமணிவிளக்கானவரெசெஞ்சொல் விளக்கிடு முஸ்தபாவே தீன்தீன் முஹம்மது எனப்போற்றினர், கஞ்சநபியங்கே திரும்பிப்பார்த்தார் கனகமிலங்கிய முகத்தினுலே ()

சிங்காசனமொன் றங்கிருந்ததத் திறக்கவொருவர்தா னிருந்த னரே, சங்கையுடனவர் பாதமிரண்டு தகத்தழுவின்மே லாணி கொண்டு, அங்கம்புயமிரண்டு அறுசதனே யதிகமாய் முட்டித் தானிருக்கவுமே, எங்குமவர்முக முன்னும்பின்னு மிடமும்வலதிலு நாலுமுகம். (93)

முகத்திலொருமுக மொளிவினலே மொழியுமொருமுகம் நெருப்பினலே, பகைக்குமொருமுக மிருளினலே பார்க்குமொரு முகஞ் சலிப்பினலே, வகைகொளளொருமரம் வலதுபாலில் வகை யாய்ப்பழஞ் சொரிந்திருக்கவுமே, சுகத்திலவரைத்தான் சூழ்ந்து கொண்டு தொலையா மலக்குகளிருக்கக்கண்டார். (94)

இடதுபுறத்தினி லொருபலகை யெழுதியிருக்கிற வகையுங் கண்டு படருஞ்ஜிபுரியீல் தம்முடனே பகருமிவர்நாம மெனக் கேட்கவே, அடருஞ்ஜிபுரியீல் மலக்கல் மவுத்தாகும் இஸ்றயீ லிவரேயெனக் கடுகவவர்கிட்டே நபியுஞ்சென்று ஹஜறத்துசலாங் கூறலுற்றார். (95)

திரும்பிநபிதம்மைப் பார்க்கவில்லை சிறந்தசலாத்துக்குப் பிரத்தி யில்லை, யிரும்புமனதுபோ லிருக்கக்கண்டே யிரண்டாவது பின்னுஞ்சலாமுரைக்க, விரும்பிமிறையவ னிசுறயிலே மேவுநபி சொல்லுஞ் சலாத்துக்குநீர், திரும்பிப்பிரத்தியுங் கூறென்னவே திடுக்கிட்டிசுறயீல் தலையெடுத்தார். (96)

வள்ளல்சலாத்துக்குப் பிரத்திசொல்லி வரிசைநபியைத்தா னருகிருத்திக், கொள்ளுந்துனியாவில் ஹயாத்தைவாங்கக் கோபி யானங்ஙன் போயிருந்தேன், தெள்ளுந்திருமேனி முஹம்மதனுர்

திரும்ப இசுறாயீல் தன்னைப் பார்த்து, உள்ள முகமெத்தப் புதுமை யாக உமக்கு நால்முக மேதுக்கென்றார். (97)

நெருப்பு முகத்தினால் காபிர்களை நெருங்கியவருயிர் தனை வாங்குவேன், வெறுப்பு முகத்தினால் பகிலர்களை வெருட்டிய வருயிர் தனைவாங்குவேன், கறுப்பு முகத்தினால் பறவைக்காலி கசடருயிர்களைத் தான் வாங்குவேன், குறிப்பாய்ச் சந்தேஷ முகத்தினாலே குளிர்ந்த மூமீன்களுயிர் வாங்குவேன். (98)

அரியு மதன்வகை நபிமகட்கவே அதற்கு இசுறாயீல் வகையுரைத்தார், பெரியமரத்திலை மடியில்வீழும் பேணியதில்வரி தனை வாசித்து, உரியபலகையி லெழுத்தைப்பார்ப்பேன் ஒடுங்கியதுவுந் தானழியக் கண்டால், வருகுமவுத்துக்கு அடையாளந்தான் வந்த தெனவவருயிர்வாங்குவேன். (99)

வாங்குமுயிர்களை யில்லியீனும் வலியசிஜ்ஜீனுந் தானும்வைப் பேன், ஓங்கும்படி யெல்லாங் கண்டபின்பு உண்மை நபியுல்லா முன்னே பார்த்தார், பாங்கிலொருபள்ளி முத்தினாலே பசிந்தமரகதத் தூண்கள் நாட்டி, வாங்குந்தொகையு மவுறாதுடன் வானவர்களைத் தானுங் கண்டார். (100)

பள்ளியதற்குமுன் னாறோடவே பண்பாமலக்குகள் தன்னில் மூழ்கி, வெள்ளிக்கிழமைநா ளானவுடன் மேவுயதற்குள்ளே தான் புகுவார், உள்ளே ஒருஜவா னவருடனே யுவந்தே யொருவர் தானிருக்கக்கண்டு, மெள்ளஜிபுரியீல் தன்னைநோக்கி மேவுமிவர்களா ரென்றபோது. (101)

பயித்துல்மஃமூதுப் பள்ளியிது வள்ள லிதுரீசு மூசாவென்றார், செயத்துளாகிய நபியுல்லாவும் சிறந்துசலாஞ்சொல்லி யருகிருந் தார், புயத்திலிணையில்லார் பிரத்தி சொல்லிப் புகழ்ந்துமுஹம்மதைக் கொண்டாட, நயத்தமாமொழி பலதும்பேசி நபினார்முஹம் மதைப் போற்றி செய்தார். (102)

மூத்தநபிமார்க ளிருவரயும் முஹம்மதுநபி தொழுகச் சொன்னார், சாற்றுஞ்ஜி புரியீல் முஹம்மதே நீர் தானேயிமாமத்துச் செய்யுமென்றார், ஏத்தநபியுல்லா விமாமாகவே யெல்லோரும் வந்து தொழுதுகொண்டார், பாத்திஹாவுடன் குல்குமோதிப் பயகாம்பர்நபி தமைப் புகழ்ந்தார். (103)

மஞ்சுகுடையிடும் நபியுல்லாவும் [illegible] நடக்கும்போது, அஞ்சாம் வானத்தின் வாசலின்மேட [illegible]பியுல்லா உட்புகுந்தார், துஞ்சும் நெருப்பிலே யுடலும்பாதி [illegible]னலிலே யுடலும்பாதி. (104)

பரிசை நெருப்புக்குத் தண்ணீருக்கும் பகையான தொன்று கணுகவில்லை, வரிசைத் தஸ்பீஹு தானுமோதி வல்லோனிடத்திலே

துவாவுஞ் செய்வார், தெரிசை முஹம்மது னும்மத்தோர்க்குத் தீதொன்றணுகாமல் குளிர்ந்துபோக, வுரிசைநாயனே சுவர்க்கத் திலே யும்மத்தோர்களைத் தானொக்குவாய். (105)

ஹாறூனபி தன்னைக் கண்டுநபி ஹாஜத்துடன்சலா மவர்க்குச் சொல்ல, நேராயிருந்திடும் ஹாறூனபி நிகழ்த்துஞ் சலாத்துக்குப் பிரத்திசொன்னார், சீர்கள்பெருகிய நபியுல்லாவுஞ் சிறந்துதொழு விக்கச் சொன்னபோது, நூறுமுஹம்மது ஸல்லல்லாவே நோக்கித் தொழுவியும் நீரேயென்றார். (106)

ஞானமுழங்கிய விறசூலுல்லா நல்லஜிபுரியீல் தான்கூடவே, தானமதைக்கடந் தகலும்போது சங்கை மாராயந் தானுரைத்தார், ஈனமணுகாத வும்மத்தோர்க்கே யிதுவேவிசுவத் திருக்கச் சொல லும், தீனிலிது மெத்தப் பெரியதென்று சிறந்த நபியுல்லா தமக்கு ரைத்தார். (107)

அருமையுடனப்பால் நடந்துநபி ஆறும்வானத்தில் செல்லும் போது, திறமையாகிய மரகதத்தால் சிறந்த வானமும் படையுண் டதே, யுரிமையாகிய பதினாயிர மொளிவிட்டிலக்கிய வானவர்கள், முறமை யுடனவர்க் கிருபுறமும் முளைத்துச் சிறகுக ளிருக்கக் கண்டார். (108)

சிங்காசனத்தின்மே லொருமலக்குச் சிறப்பாயிருக்கிறா ரவ ருடைய, அங்கந்தனிற் பச்சைக் குப்பாயமு மவர்தான் ரோமங்கள் வெளியுருகி. எங்கும் பசந்துகி லுடுத்திக்கொண்டே யிருந்தாரவர் மிகக் கோபமுடன், பொங்கு மவர்க்குத்தான் வானவர்கள் போந்து சலாஞ் சொல்லத் தானுங்கண்டார். (109)

இலக்கமுடனப்பால் நடக்கும்போதே யேழாம் வானத்தி னொளிவுங்கண்டு, துலக்கமேதென்று பார்க்கும்போது தோன்று வாசலின்படி பூட்டினில், இலக்கமொரு வரிலாயிலாஹ இல்லல் லாஹு வேன்றெழுதியதே, துலக்கமொருவரி முகம்மதுற் றசூ லுல்லாஹியென் றிருக்கக் கண்டார். (110)

பூட்டிலெழுதிய கலிமாதன்னைப் புகலும்போதப்போ வாசல் தானே, பூட்டுதிறப்பது போலதாகப் பெரியவாசலுந் திறந்ததுவே. தேட்டமுள்ள நபியுஞ் ஜிபுரியீலும் சென்றங் கலனுள்ளே பார்க்கும்போது, கூட்டமிகுதியாம் வானவர்கள் கூடிச்சஜிதாவி லிருக்கக் கண்டார். (111)

வாசமுடனேழாம் வானமது வயிடூரியத்தினாற் படையுண்டதே பேசுமிவர்கள்தன் சத்தங் கேட்டுப் பேணியதிலுள்ள வானவர் கள், ஓசையுடனேதா னீங்களாரென்று வந்துகேட்டிட ஜிபுரியீல் தான், தேசம் விளங்கிய ஆலநபி சிறப்பாய்வருகிறா ரென்றனரே. ()

நூறுநபியுல்லா மிஃறாஜுக்கு நோக்கிவருகிற சேதிகேட்டுக், கூறுனிமார்க ளனேகர்களும் கூடிநபியுல்லா வந்தாரென்று, மாரா

யங் கூறி மனமகிழ்ந்து வரிசை நபியைத்தான் கொண்டாடினார் நேராம் நபியுல்லா தவற்குப்பின்பு நேர்மையுடனேதான் திரும்பி வந்தார். (113)

அந்தவழிதள்ளி யணியணியா யனேகமொட்டகை தானடர்ந்த, விந்தையுடனிந்த வொட்டகங்கள் மீதிலிருபெட்டி தானிருக்க, முந்தவலதுபா லிருந்தெழும்பி முடுகியிடதுபாற் போகக்கண்டு, கொந்துலாவிய நபியுல்லாதாங் கூறுஞ்ஜிபுரியீல் தன்னைக்கேட்டார்.

இந்தவகையுள்ள வொட்டகங்க ளெங்கேயிருந்தெங்கே போகு தென்றே, வந்தநபியுல்லா கேட்டதற்கு வானின் ஜிபுரியீல் வகை யுரைத்தார், எந்தன் வயதுள்ள மட்டும் யானு மிதனைக் காண் கிறேன் வகையறியேன், சொந்தமுஹம்மதே யானுமிந்தச் சூஷ்ம மறிந்திடவேண்டு மென்றார். (115)

அப்போதிறைபவ னேவலாயிற் ருதிமுஹம்மதே நபிக்கரசே, நட்பாலொருவொட்டை தனைப்பிடித்து நன்றுயதின்பெட்டி திறந்து பாரும், மெய்ப்பாயிறைபவ னுரைப்படியே மெவுஞ்ஜிபுரியீ லொருவொட்டகையை, அப்பாற்பிடித்தங்ங னிறுத்திக்கொண்டே யதின்மே லுளபெட்டி தனையிறக்கி. (116)

ஏற்ற திறவுகோல் வேண்டுமென்றே யேகனிடத்தினிற் கேட் கும்போது, சாற்றுமிறைய்வ னெழுதும்பூட்டில் சாற்றுங்கலிமா வாற்றி றக்குமென்றான், மூத்தநபியுல்லா ஜிபுரியீலே முடுகித்திறவு மென் றேயுரைக்க, வாய்த்தகலிமாவை யிறைசொற்படி யறைத்தார் திறந்தது பெட்டியதே. (117)

திறந்துபார்த்திடப் பெட்டகத்துட் சேரநிறையவே கோழி முட்டை, யிருந்ததவைக்கண்டு முட்டையின்மே லியர்புங்கலிமா வைத்தான் கூறினார், விரைந்தங் கொருமுட்டை தனைத்திறந்து விரித்துப்பார்த்திடு வதற்குள்ளாக, நிறைந்துகஸகஸ விருக்கக் கண்டு நிரம்பியிருந்தது லொருவிரைபை. (118)

எடுத்துப்புரட்டியே பார்த்தின்மே லெழுதுங்கலிமாவைத் தாரேதினர், விடுத்தே யதின்வாசல் திறந்திடவே வேதநபிதாமும் ஜிபுரியீலும் நடந்தகஸகஸா விரையினுள்ளே நாடிப்புகுந்தெங்குஞ் சுற்றிப்பார்த்தாற், கடிந்துஜிபுரியீல் சிறகையெல்லாம் கனமாய் விரித்தங்ஙன் பறக்கலுற்றார். (119)

பறந்துபோயெங்கும் பார்க்கும்போது பாரச்சிறகது தான யர்ந்து, விரிந்த இறகெல்லாந் தானுதிர்ந்து விழுந்துமெலிந்தவர் திரும்பிவந்து, சிறந்தநபியுல்லா திருமுன்னின்று சிறப்பாய் ஜிபுரி யீல் தானுரைப்பார், பொருந்துகாரண நபியுல்லாவே புறுக்கான் மறையுள்ள முஸ்தபாவே. (120)

வனுவாய்ப் பறந்தெழு பதினாயிரம் வருடத்தடிப்பாடு பறந்து பார்த்தேன், நிலையாய்த்தொடர்ந்தோடிப் பறந்துபோயும் நீளந் தொலைந்ததின் முடிவுங்காணேன் தொலையாவிருதுள்ள முஹம்

மதேநர் துய்யகலிமாவைத் தானேயோதி, நலமாயிதிலுள்ள மனித
ரெல்லாம் நாடித்தொழுது கொண்டிருக்கிறார்கள். (121)

என்று ஜிபுரியீ லுரைத்தபின்ன ரிறசூல்முஹம்மதர் வந்தா
ரென்று, நன்றாயதிலுள்ள பார்த்துஷாவம் நரகத்திலுள்ள மனிதர்
களும், ஒன்றாயொருமித்தங் கெதிரேவந்தே யுயர்ந்த நபியுல்லா
தான்பணிந்து, மன்றாடவல்ல மணிவிளக்கே வரிசைமுஹம்மதே
யெனப்போற்றியே. (122)

ஆதிமுதலவ னருட்டூதரே யஹ்மதுநபி முஸ்தபாவே, நீதி
நெறிநவ மணியேயென நிகழ்த்தி முஹம்மதைக் கொண்டாடினார்,
வேதநபியுல்லா தீனானது மேதினிமற்று மெங்குமான, சோதனை
யறிந் திறசூலுல்லா துய்யோனளவிலே துவாவிறந்தார். (123)

வல்லோனளவிலே துவாவிரந்து வந்திமனிதரை யனுப்பி
விட்டு, நல்லஜிபுரியீல் தானுமாக நாடியதைவிட்டு வெளியில்வந்து,
முல்லைகஸகஸா விரையைமூடி மூட்டையொடுபெட்டி மூடிதன்னை,
எல்லாங்கூட்டியே ஒட்டையின்மே லெடுத்துப்பொதிந்துப் போட்
டங்கனுப்பிவிட்டார். (124)

வரிசையுடனதை யனுப்பியதன் வல்லோனிடத்திலே துவா
விரந்தார், விரியுஞ் ஜிபுரியீல் சிறகுத்னை விரிக்கத்துனியாவும்
போதாதவர், அரியபெரியோனே யுன்வனுப்ப மளவிலடங்காதென்
றிசைத்துப் போற்றி, பெரியோன்காரண மிகவுங்காணப் பேசு நபி
யுல்லா தானுங்கண்டார்: (125)

பூங்கா வனமுள்ள சுவர்க்கந்தன்னைப் புதியமதியது போலக்
கண்டு, பாச்சாயதுக்குமுன் வாசற்படி பளிங்குவயிரத்தால் படை
யுண்டதும், நீங்காநிலைகளும் பொன்னினாலே நிறைந்தமாணிக்கம்
பதித்திருக்கும், பாங்காய்முகப்பினிற் றிருக்கலிமாப் பகருமுஹம்ம
தென் றெழுதியதே. (126)

வரைந்தவெழுத்தை .யோதியபின் வலதுகாலைமுன் வைத்துள்
ளாகித், திறந்துபார்க்கும்போ தொருமாளிகை சிவந்த மாணிக்க
மதனாலுண்டு, பிறந்தபிறைபோலே யொருவரதில் பேணியிருக்கிறா
ரவராரென்றால், நிறைந்த சுவர்க்கத்து வாசல்காக்கும் ரீதித்தலை
மையா யிருப்போரென்றார். (127)

சுவனமதிற்றேனார் பாலாறுந்தான் துலங்கு நீராறு மதுவா
றுண்டு தவனந்தணியவு நீர் குடித்தால் சாய்த்தவயதற்று வாலிப
மாம் நவநீதமுள்ள நாலாறுந்தான் நன்றாய்வருகிற பரிசுங்கண்டு
அவனிதனிலக்க ஆறோடியே யன்பாயிரண்டாகச் செல்லுமென்றார்.

சுற்றுமாயிரங் காதவழி சுவர்க்கந்தனிலொரு வீடுகண்டு, மெத்
தப் புதுமையாய் முகப்புவாசல் விளங்கத்திசை நான்கு மிகுதி
யுண்டு, முத்திலாகிய மாளிகைகள் முந்நூறுலட்சந் தானுமுண்டு,

பத்தி சிறந்திட்ட பவளத்தாலும் பளிங்குவயிரத்தால் மிகுதி யுண்டே. (129)

நிலங்களது வெல்லா மாணிக்கத்தால் நிலைகளது வெல்லாம் வயிடூரியம், துலங்கும் குரிசெல்லாம் செம்பொன்னாலே துய்ய தலையணை பஞ்சுமெத்தை, பலன்கள் சொரிந்திடு மரங்கள் தானும் பச்சையிலை யெல்லாம் கட்டினாலே, நலங்கொள் சுவர்க்கத்தின் வரிசைபின்னை நவிலதெரிலையாத புதுமையதாம், (130)

நலமதாகிய சுவர்க்கத்திலே நடுவேயொரு சிங்காதனத்தின் மீதில் நிலைமையாகவே றிலுவானெனும் நேர்மையுடனொரு மலக் கிருந்தார் பல தாய்வீடுகள் சுவர்க்கத்திலே பளிங்குவயிரத்தால் தானுங்கட்டி தலைமையாகவே சிறிதுபேர்கள் தரிப்பாய் நிற்கிற திறமுங் கண்டார். (131)

வானியின் ஜிபுரியீல். தன்னைக்கேட்க வளமைச் சுவர்க்கத் துறிலுவானிவர், ஆனபோதங்ஙன் றிலுவானுக்கு அன்புடன் சலாஞ் சொன்னபோது, வானின் மலக்கவர் பிரதி சொல்லி வரிசை முஹம்மதை கொண்டாடியே, தீனினொளிவாக வந்தவரே தீன்தீன் முஹம்மதே யெனப்போற்றினார். (132)

வந்தநபியுல்லா மலக்கைப்பார்த்து மாடமிதுவெல்லா மாருக் கென மூந்துமிறையன் றாதரான முஸ்தபாநபி யும்மத்தோர்க்கும், நந்தலிலாத்துய்ய கலிமாவோதி நன்றுபதின்படி நடந்து பேர்க்கும், புந்தி தனிலத்தானவனைப் பொருந்த வொருமையாய் புகழ்ந்த பேர்க்கும். (133)

ஐந்து பறுலையுந் தொழுதுகொண்டு ஆறைந்தாகிய நோன்பும் வைத்துப், பந்தஹைறையுஞ் சக்காத்தையும் பாரிலெளியோர்க் குக்கொடுத்த பேர்க்கும், சொந்தமாகிய நடுமக்காவில் தூய்தாய்ப் பெறும் ஹஜ்ஜு செய்தபேர்க்கும், இந்தச் செயலுள்ள உம்மத் தோர்க்கு இந்த வீடுகளாகு மென்றார். (134)

வட்டமதி தன்னை வகிர்க்திட்டால் வரிசைநபியுல்லா தம்மைப் போற்றி, இட்டமுள்ள நல்ல சுயம்பொருந்தி யிலங்கும் நபியுல்லா ஒளியும் பொங்கி, எட்டு சுவர்க்கமுந் தானிலங்கவெங்கும் நவுபத்து அடிமுழங்க, அட்ட திசையெல்லாம் தீன்தீனென்ற அஹ்மதொளி யெங்கு நிறைந்ததுவே. (135)

சிறந்த நபியுல்லா வரவுகண்டு சிதாத்துல் மூந்த ஹாமரமும், விரிந்த பணரெல்லாங் கனிசொரிந்து விழவுந்தடமெல்லாந் தான் குளிர்ந்து, நிறைந்தகூறுனி மார்களெல்லாம் நின்று சுவர்க்கத்துத் தகிலுடனே, பரந்த வெளிச்சம்போல் மாணிக்கத்தால் பண்பயா லாத்திதானெடுத்தார். (136)

ஆலநபி சொர்க்கம் பார்த்துப்பின்ன ரங்கிநரகத்தைப் பார்க்கும் போது, சீலமிலாத்தழ லெழும்புவதும் செந்திக் கொழுந்துகள்

வனேகிறதும், கோலமலேகள் போலர வந்தானும் குளவியிருளுமா யிருக்கிறதும் கானுங்கொதித்திடும் கொடுஞ்சூட்டிலே கதறியழுகிற கடினங் கண்டார். (137)

பின்னரொருத்தனைச் செய்குறட்டாற் பிடித்துச் சதை யெல் லாம் பிடுங்கிறதுங், கண்ணின் வழிரண்டும் பிதுங்கிடவே கரைந்தே யுடலெல்லா மொடுங்கக்கண்டு, வன்னஜிபுரிலே யிவனரென வரிசை மனையாட்டி தானிருக்கக், குன்னம் கருமசனுச் செய்துவந்த கொடி யமுதேவி யிவனுமென்றார். (138)

நாட்டியெரிகிற நரகத்துள்ளே நடுவேயொரு சிங்காசனமுங் கண்டு, சூட்டும் நெருப்பினல் நூருயிரம் சூழ்ந்தவிடமெல்லாம் பாம்புந் தேளும், மூட்டுநரகத்து மாலிக்கெனும் முதலாளி யவரி ருப்பிடமும் கோட்டு நரகத்து முதுகின் பேரில் கோணப்பாலமு மிருக்கக் கண்டார். (139)

சக்கிரமாமெனுங் கள்ளிமா முள்ளிலே சண்டாளி யொருவன் றனைத் தூக்கியே, சுக்குமாந்தடி கொண்டடித்துச் சூடுதாவிட நெருப்பை மூட்டித், துக்கக்கடினமாய் வெதும்புகிற சூமன்யா ரென்று கேட்கும்போது, விற்கும் கொள்வினை கொடுப்பனையில் வீணுப் பொய்யானை யிட்டோனென்றார். (140)

தாவுஞ்சகனத்தி லொருவன்றன்னைத் தலைகிழாகவே தூக்கிக் கட்டி, நாவுகுழறிட வரவமது நடுங்கக்கடித்திடவே சூட்டினல், சூலமுகம் போலே யிருக்கக்கண்டு தூடனிவனுரென்றே கேட்கவே, பாவியிவனுள்ளே குபிரையூணிப் பார்க்க மூமீனு யிருந்தோ னென்றார். (141)

பின்னரொருவனை நரகத்துள்ளே பிடித்துப்பின் கட்டாயத் தானுங்கட்டி, வன்னியது தன்னில் வாயுமூக்கும் வருத்தப்பட வெந்து இருக்கங்கண்டு, முன்னேமுகமெல்லாங் கருகி வெந்த மூடனுரென்றே கேட்கவப்போ, சன்னையுடனே தானே பேசிய சண்டாள னிவனென்றுரைத்தார். (142)

கொடிய நரகத்தி லொருமாதைத்தான் குலையத்தலைமயிர்க் கொரு பாம்புதான், கடித்துப் பிடுங்கித் தேளுங்கொட்டக் கதறிக் கிடந்தவளழுகக்கண்டு, தொடர்ந்து ஜிபுரிலே யிவளாரிதை சொல்லு மெனக்கேட்கத் தலைதிறந்து, எடுத்து மதலைக்குப் பால்கொடுத்தே யிடும்பு பேசின கோதை யென்றார். (143)

வஞ்சி யொருததிதா னரகத்திலே வந்தநெருப்பினு லாடை பூண்டு, நஞ்சுமிழந்திட மேனியெல்லாம் நாற்றமுடனங்ஙன் கிடக்கக் கண்டு, துஞ்சபயந்திடுவளா ரெனவே சொல்லுமெனக் கேட்கவ வருரைப்பார், வஞ்சிவாயினிற் பாக்கொதுக்கி வன்னத்துகிலாடை யுடுத்திக்கொண்டு, கொஞ்சித்தெருவீதி நால்பேர் முன்னர் கோலி நடந்திட்ட கோதை யென்றார். (144)

முட்டுங்கனல்மீறு நரகத்துள்ளே மீளாவருத்தமாம் வீடொன்றதில், வொட்டாக்கிணறது நூறுபாகம் வீழும்நெருப்பினுபெட்டகத்தில், கட்டிடவதிற் பாம்புந்தேளும் கவ்விப்பிடித்திடு மிவராரென்ருர், வட்டிவாங்கியேவயிர்வளர்த்தவண்டாகிலபகீலரென்ருர்.

சூளைநரகத்தி லொருமனிதன் சுழன்றுகிடக்கிறுன் பதறிவெந்து, மூளைகொதித்திடத் தலையில்சுட்டு முகங்கள் கருகவேநெற்றிவேர்க்கக், கோழைப்படுகிறு னிவனுரென்று குறித்துகேட்கவே யிவனுரென்ருல், ஏழையெளியோரைக் கடுகடுத்துமுறுக்கி முகம்பார்த்த ஈனரென்ருர். (146)

வெண்பா.

அழலெரியுஞ் சூட்டி லனேகரெல்லாம் வருந்தி
தழலதனி னின்றெரியத் தான்கண்டு—மணமலரின்
தார்புனையு மாலநபி கார்விழியில் நீர்சொரியக்
கூர்மையுடன் றெரித்தார் குறித்து. (147)

தோங்கல்.

அந்தமுளநபி கூர்மையாக வநேகம்போர்கள்தா னரகத்துள்ளே, வெந்தீ கருகிடுங்கொடு மகண்டு மேலோனிடத்திலே துவாவிரந்தார், முந்தமுதல்கடை நடுவிலானே முழுதுமறிகின்ற வல்லவனே, யிந்த வருத்தத்தை யிவர்களுக்கே யில்லாதகற்றுவாயென்றுரைத்தார். (148)

அன்னமுஹம்மது மனுவுகேட்க ஆண்டபெரியவன் மொழியலுற்ருன், அன்னவிவர்களை விட்டேனுகில் ஆவலுளவும்மத்தோரையெல்லாம், வன்னியெரிகிற நரகத்துள்ளே வருத்தப்படுவதேனென்றபோது, இன்னுமுஹம்மதென் னும்மத்தோரை யெரிவிடவேண்டா மெனக்கரைந்தே. (149)

கண்ணிலெழும்பிய நீரானது கழன்றுவெளியிலே விழுந்துதானுல், குன்றநரகத்திலும் மத்தோரைக்கொடிய அதாபிலே வருத்திவைப்பேன், என்றமொழிகேட்டு நபியுல்லாவு மிருகண்ணீரையுமுள்ளடக்கி, வென்றியுடையோனே யிறைபவனே வேதமுதலோனே யெனப்புகழ்ந்தே. (150)

அருபவுருவில்லா றப்பனுவே அஹதா யொடுக்கமு முடிவிலானே, திரையாங்கடலேழு மலைகளையும் சேரத்தரமாக வமைத்தவனே, உருவத்திணையெல்லா மறுத்தேயுன்ற னொருமைப்பாட்டினிலைமையாக்கிக், கருவிருவுவாமென் னும்மத்தோர்க்குக் கனகசுவர்க்கமுங் கொடுப்பா யென்ருர். (151)

கொடியநரகத்து வேதனையைக் கோமா னபியுல்லா கண்டுபின்பு, கடினமாகவே நடக்கும்போது கறுத்தவிருளொன்று தானுங்கண்டு, நடுங்கவிருளிலே விண்பூமியும் நடுவேயமுந்திடு

மவ்விருளில், ஓடுங்குதிரை பெழுபதினுயிர முள்ளதிரையெல்லாங் கடந்தபின்பு. (152)

வண்மையாகவே பதினுயிரம் வருடத்தூடிப்பாடு நடந்தபோது வெண்மையாகிய வொளிவினுலே வெள்ளைமேகத்தைத் தானுங் கண்டு, செம்மையுலகிலு மதிகமாகச் சிறந்தநூறு மடங்கிருக்கும்மது, உண்மைத் திரையெழுபதினுயிரம் ஒளிவாகியவை தான்கடந்தார். ()

பனியினுலெழு பதினுயிரம் பாரத்திரை யெல்லாங்கடந்த பின்பு, தொனியா மிடியினுல் நூறுயிரம்சூழ்திரையெல்லாம் தான் கடந்தே, யினியசுடரொளி மண்ணினுலே யிலகுந்திரையெழு பதினுயிரம், துனியாப்பலதுமே யதற்கேயொரு தூசிகிடக்குமாப் போலக்கண்டார். (154)

வரையுந்திரை யெவ்லாங் கடந்தபின்பு வாரின்ஜிபுரியீல் மறைந்து போனுர், உரியமனதிலே திடுக்கமுற்றே யுற்றுப்பயப் பட்டா ரப்பொழுது, விரியுஞ்ஜிபுரியீல் வந்திறங்கி மீண்டும்வகை சொன்னு ரென்றனக்குப் பெரியமுஹம்மதே யெனக்கினிமேல் பெரியோனுத்தர வில்லையென்றூர். (155)

மீண்டுமிதற்குமேல் வந்தேனுகில் மேலோனொளிவிலே யானு ருகி, மாண்டுபுனலாகப் போவேனென்று வானின்ஜிபுரியீல் சொன்ன போது, ஆண்டபெரியவ னேவற்படி யாணிமரகதச் சிவிகை யொன்று, தோன்றும்பல்லக்கு வந்திறங்கத் தூதர் ஜிபுரியீ லெனை யழைத்ததே. (156)

ஒளியுங்கடலிலே முழுகாட்டியே யுலரச்சிறகாலே யரவணைத் துப், பளிங்கு வயிரக்கால் தண்டிகையில் பரிவாய்த் தனைவைத்தார் கொண்டு போகத், தெளிவாய் மலக்குகள் நால்வர்வந்து தீனிட் டெடுத்துக் கொண்டே நடந்தார், குளிர்ந்து ஆயிரங்காதவழி கூட்டிநடந்தபின் னொளிவைக்கண்டார். (157)

அங்கனொளிவினுல் மெத்தையின்மே லழகாயொரு மலக்கி ருக்கக்கண்டு, பொங்கவவ்விரு தோளுமார்பும் புகலவாயிரங் காத முண்டு, சங்கையுடனப்பால் நடக்கும்போது தரிப்பாய்க் கடலுக்கு ளொருமலக்கு, எங்குமவர்கையால் தண்ணீரள்ளி இறங்குமேகத்தில் விடவேகண்டே. (158)

அவரையாரென்று கேட்கும்போது அவர்தான்மீக்காயிலென வுரைத்தார், கவனமாயவ ரிடத்திற்சென்று கவனுஞ்சலாஞ் சொல்லப் பிரத்திசொன்னுர், புவனமீக்காயில் நபியுல்லாவைப் புகழ்ந்துபோற்றியே கொண்டாடினுர், நவநீதமுள்ள பரிசுங்கண்டு நாடியதற்குமுன் நடந்தனரே. (159)

வானினமலக்குகள் நிரைநிரையாய் வாங்குந்தஸ்பீஹும் சல வாத்துடன், தானேதுவாச்செய்து நிலைநிற்பாரும் தலையாம் அக்கூவு தான் செய்வாரும், ஈனமணுகாமல் சஜிதாவினி லிணங்கி

யிருப்போருந்துவாச் செய்வோரும், தீனினொழுங்கெல்லாங் கண்டு வந்து சிறந்தே யதற்கப்பால் நடந்தனரே. (160)

நடந்துவருகச்சே யொருமலக்கு நாயன் பரிமாணி லிருக்கக் கண்டு, தொடர்ந்தங் கவரைத்தான் சூழ்மலக்கு சொல்லும் பதினாலுலக்கமுண்டு, படருமவருட வலுப்பமது பாஹங்ஹத்தரு வூணிக்கொண்டு, கடிந்த தலையது அறுசைமுட்டிக் காலுமண் போட்டிருக்கக் கண்டார். (161)

சூறென்னுங் குளல்தனை யெடுத்துச் சுருளமூச்செல்லாஞ் சுருக்கி வாங்கிப், பார்வை நிமைக்கொட்டார் கழுத்தைவிம்மிப் பார்த்தங்கிருப்பவ ரிவராரெனப், பேருமிசுறாபீ லெனவுரைக்கப் பேணியவர்க்குமுன் சலாஞ்சொல்லினார், கூறுஞ்சலாத்துக்குப் பிரத்தி சொல்லிக் கொண்டாநபி தமைப்போற்றினார். (162)

வரிசையுடனப்பால் நடக்கும்போது வல்லபெரியவ னறுசைக் கண்டு, தெரிசத்துடனங்ங னடக்கும்போது தீன்தீன் முஹம்மதென் றொருவெளிச்சம், புரிசைகுலுங்கவே யறுசிலங்கிப் பொங்கவொரு சத்தங் கேட்டாரது, வரிசைமுஹம்மதே யறுசி லறிவாருமென விறை கூறலுற்றான். (163)

வாசநபியுல்லா அறுசிமேலேற வரிசையுடனிரு கபுசைத்தானும், கூசிக்கழற்றவே நினைக்கும்போது கோமான் சத்தமொன் றிறங்கியதே, காசிமுஹம்மதே யும்முடைய கபுசைக் கழட்டாம லேறுமெனப், பேசுநபியுல்லா கபுசுடனே பேணியறுன சேறக் கூசுதென்றார். (164)

வண்மையுடன்மூசா துரிசினாவில் வரிசைகபுசையுங் கழற்றினரே செம்மையுடனேயான் கபுசுடனே சென்று அறுசேரப் பொருந்தேனென, உண்மையாகிய அறுசுதானு முவந்து நடுங்கியே நிற்கின்றது, வெண்மைமதிசுடர் பட்டால் மீண்டு மசையாமல் நிற்கு மென்றான். (165)

எல்லாநபிபிலு மேத்தமான எங்கள்முஹம்மது முஸ்தபாவே. நல்ல கபுசோடே யறுசிலேற நாயனருள்வந் திறங்கியதால், வல்ல முஹம்மது கபுசுடனே லாகாயறுசினி லேறினரே, சொல்லறிவாள னபியுல்லாவும் துய்ய அறுசெங்குஞ் சுற்றிப்பார்த்தார் (166)

பெரிய அறுசிற்கு முந்நூறுடன் பேணி அறுபதி னாயிரந்தான் அரியதூணுக்கு ஒருதூணிடை ஐந்நூறாண்டு அடிப்பாடுண்டு, மூரிய தவசிமேலே யொருமலக்கங் குவமைசேவலின் வடிவுபோல், விரியுஞ் சிறகெல்லாம் வெண்மையாக மீண்டுமிருப்பதைத் தானுங்கண்டார்.

கூலமகிழவே யறுசதனைக் கோலியானங்ஙன் பார்க்கும்போது, நாலுமலக்குக ளறுசைத்தானும் நன்றாய்ச் சூழ்ந்துகொண் டிருக்கிறார்கள். காலுங்கண்டைக்கா லளவுமட்டும் காணாதவர்களுக் கெழுபூமியும், நீலமொழுகிய வறுசைச்சூழ்ந்து நிறையமலக்குக ளிருக்கக் கண்டார். (168)

பின்னர் ஆயிர மலக்குடனே பெரியமலக்கவர் தானுமவர்து, அன்ன முஹம்மதே யெனத்தழுவி யகண்டவெளியிலே நடக்கலுற்ரூர், இன்பத்திரையெழு பதினுயிர மிலக்கந்திரைகளைக் கடந்த பின்பு, முன்பால் மாகதத் திரைகடந்து முனிவா மாயிரத் திரை கடந்தார். (169)

ஆணிப்பசும் பொன்னுல் திரைகள் கண்டே யந்த நற்றிரை தான் கடந்து. பேணியிருளினல் பனியினுலே பெருமைத் திரை யெழு பதினுயிரம், ஊனுவிசிடு மணம்தனு ளுள்ள திரையெழு பதினுயிரம், தோனுமவை யெல்லாந் தான்கடந்து துய்யோன ருளிய சத்தங் கேட்டார். (170)

சத்தமேதென்னுல் முஹம்மதரே தாவியென்னிட்டே வாரு மென்ருன், உற்றவிசளங்கள் பேசவேண்டி யுவர்ததிரை பொன் னைத் தாம் நீக்கியே, வெற்றிவிருதுள்ள வேதாம்பரே விரும்பி யென்னிட்டே வாருமென்ருன், சுத்தவடியதை யெடுத்துத்துத் தூக்கித் துய்யோன் தனைநோக்கி நடக்கலுற்ருர். (171)

கொடியிலோரடி வைக்குமுன்னே நூறுபிரங்காத வழிநடந்து, முடுகவாருமென் றிறையுரைக்க முன்னேயோரடி தானும்வைக்கப், படுங்கலாயிர வருடத்தடிப் பாடுகடந்தபி னிறையுரைத்தான், அடி யூன்றிவைத்து வாருமென்றே யாதிபெரியோனும் நெருங்கினனே. ()

ஒருமைப்பாடுள்ள யிறையொளிவை யுவர்ந்து பார்த்திடப் பொறுக்காமலே, வெறுமைபாகவே கண்புகைந்து விழிந்துகிடந் திட விறையுரைத்தான், அருமையாகிய முஹம்மதரே யுருண்டு பயந்திட வேண்டாமென்றே, யுரிமையாகிய சத்தங்கேட்டகங் குவந்து பயமெல்லாந் தெளிந்து நின்ருர். (173)

யாமுஹம்மதே முடுகிவாரு மென்றனெளிவைநீர் பாருமென் ருன், நாமலாகூத்து மலக்கூத்தையும் நலமாயொதுக்கியே பார்க் கும்போது, கோமானெளிவுருக் காணுமலேகொற்ற பெரியோ னைப் புகழ்ந்து நின்ருர், ஆமீனுதவிசெய் யாறப்பனு அனுகியா னுன்னைக் காண்பதற்கே. (174)

ஆக்கமுடையவன் ஜபறூத்தையும் ஆராயந்தொதுக்கியே யகற்றி விட்டுத், தீர்க்கமுடனே நீ ரிங்ஙன்வாரும் தீன்தீன்முஹம்ம தென் றிறையுரைத்தான், மூர்க்கமுடனிதைப் பார்த்துதானம் மூன்று விரங்கிடை முடுகிநபி, பார்க்கும்போதொரு லாகூத்தையும் பளிச்சென் ருெளிரவே தானுங்கண்டார். (175)

விருத்தம்.

பொங்குபுகழ் பெரியவல்ல நாயனருள் பொருந்திவரு மென் றழைக்கவே, அங்ஙனத்திரை நடுக்கண்டுபேசியே யுணர்ந்தகண் டாண்ட மோடியே, திங்களிலங்கும் நபிவர்துமலக் கூத்தையும் சிறந்தே கடந்தொளிவதாங்ச், சங்குவலம் புரிபோலெங்குமோ ரோசைகொடுதானுமோ ரொளிகாட்டினன். (176)

காட்டுமொளிவு தனைக்கூட்டியே தானுவந்துகமல மலர்களி கூரவே, நாட்டுபுரையும் பங்கயம்போற் சேருமதுநடுவா திரை மூடியே, ஆட்டுதிரை யறுத்தாகி யத்துடனே யஹ்றமது தான் பேசினார், பூட்டுதிரைக் கலிமாநாட்டும் நடுவறிந்து பூரித்தக மேவினார் (177)

ஆகியேநாயனே யவ்வலகதேயுன்றன் அக்குமயங்கண்டே னென ஓதியே, தாம்புகழ வேதாம்பரால் நபியுடனிறையவன் கூறுவான், சோதியே யிறங்குமறை துலங்கு மஹ்மூதே தூய்தாயெனைக் கண்டீரோ, நீதியிறையவனே சிந்தைகளி கூராயன் நெருங்கியுனைக் கண்டேனென்றார். (178)

தோங்கல்.

வெளியிலிருபத்து நாலாயிரம் விஸரந்தவசனங்கள் தானும் பேசித், தெளிவா மறைவிலே யிருப்பத்துநால் சிறந்தவாயிர வசனும்பேசி, ஒளிவாயதற்குமேல் கணக்கில்லாத ஒருமைவசனங்கள் தான் பேசினார், விளியுஞ் சிலமொழி மாந்தருக்குவிள்ளா தேசில் தோதீரென்றான். (179)

வெற்றிவிருதுள்ள ஆலந்பி வெகுமான மெல்லாம் பெற்ற பின்பு, கத்தனருளினன் முஹம்மதரே காணிக்கையென்ன கொண்டுவந்தீர், அத்தஹிய்யாத்தினை கொண்டுவந்தே னென்றோதி முஹம்மது தான்கூறினார், முத்துமொழுகேட்டங் கிறைவன் சொற்றான் மொழியுஞ்சில வார்த்தை யான்கொடுத்தேன். (180)

கொடுத்த சலவாத்துந் தக்பீரையும் கோமானிறையவன் றன்னருளால். அடுத்தமூமீன்கள் முஸ்லீம்களானவும்மத்தோ யனைவர்கட்டும், பிடித்தாலிமாவை மூடித்தபேர்க்கும் பிசகாவெனதிட சலாமுமென்றான், தொடுத்த மொழிகேட்டங் கருமையான துய்ய மலக்குகள் சலவாத்தோதினார். (181)

அல்லாவொருவனே யவனுடைய வடியார் முஹம்மதென்றுணர்ந்தபோது, வல்லமகத்துவ மூற்றகோவே வரிசை முஹம்மதே யும்மத்தார்க்குச், சொல்லும் பசித்தோர்க்குப் பசியாற்றவும் துய்ய சலாத்திற்குப் பதிற்சொல்லவும், தொல்லைதனைவிட்டுத் தொழுது நன்றாய்த் தோன்றுமிரவினில் விழித்திடவும். (182)

நன்மையிதுவெல்லாஞ் செய்துவந்தால் நாயமாவர் நந்த மும்மத் தென்றான், தின்மையெதுவென்றால் கபடுங்கோளுஞ் சிந்தை தடுமாறும் பொய்யாணையாம், இம்மைதனிலிந்த செயலைவிட்டங் கென்னேவல்தனை யெடுத்துச்செய்து, உண்மையாகவே யெனை யழிந்தே யுவந்து தொழச்சொல்லு மெனவுரைத்தான். (183)

கோமானிறையவ னபியுல்லாவுக்கு கொடுத்தவெகுமானங் கேட்டருளீர், ஆமந்துபில்லாஹி யொருவனென்று மறிந்தேயகத்தி

னுகர்ந்திடவும், ஏமன் மலக்குகளெல்லோருந்தா னேவற்பணிவிடை செய்வோரென்றும், நாமவேதங்கள் மெய்யென்றெண்ணி நல்ல கலைபுகளுண்டெனவும். (184)

மூன்று நூறுடன் பதின்மூன்றுபேர் முறுசல் நபிமாரென்று வந்திடவும், காண்டியொருலட்சத் திருபதினாலாயிரம் சின்ன நபிமாரென்றும், பூண்டகிபாமத்து நாளுண்டென்றும் பொருந்து நன்மையு முண்டெனவும், தோன்றுமனதினி லறியுமிந்தத் துய்ய வழியாறு மீமானென்றான். (185)

கலிமாத் தொழுகை சக்காத்துநோன்பு கனத்தபெரும் அச்சு மிகலாமென்றான், நிலையாமிவையதி னொருகாரியம் நிறைந்த பிரிச மாய் வணங்குமென்றான், வலியநாயனே நல்லதென்று வரிசை நபி யுல்லா வேற்றுக்கொண்டே, யொளியா நபியுல்லா றப்புடனே யுரைத்துப்பேசியே ஆமீனென்றார். (186)

ஆமீன் கூறவே யிறையவனு மாதிநபியுல்லா தன்னைநோக்கி, ஆமுன் முஹம்மதே மெளப்பேசு மென்றரியபெரியவ னுரைத் திடவே, கோமானபியுல்லா விறையைநோக்கி குதாயே யுன்னிடம் வந்ததற்குத், தாமே பயமென்ன மெள்ளப்பேசச் சாற்றின மொழியே திற்கென்றார். (187)

மீறான் முஹியித்தீன் அறுசின்கீழே விரும்பிநித்திரை செய் கின்றாரே, சிறிவிழித்தாக்காம் கோபமாவார் சிறந்தவானமும் பூமியேழும், பரவாறுசெல்லாங் கிடுகிடென்று பயந்துபோமென்றே யிறையுரைக்கக் கூறுமொழிகேட்டு நபியுல்லாதான் குதாவைநோக்கி யோர் மொழிபேசினார். (188)

எனக்குமுன்னமே யொருவரையு மிணங்கிப்படைக்கவே யில்லையென்றாய், எனக்குப்பெரியவர் தனைப்படைத்தே யிசைவா யுன்னிடம் வைத்தாயென்றே, தனக்குமொழிசொல்ல விறைய வனும் காட்சி நபியுல்லா தம்மைநோக்கி, மனக்கோதறுமிந்த முஹி யித்தீனும் வரிசைப்பேராய்ப் பிறப்பாரென்றான். (189)

உமதுகிளையினில் தீன்விளக்காயுவந்து முஹியித்தீன் பிறப்பா ரென்றே, யமுதமொழிசொல்ல நபியுல்லாவும் ஆகம் பூரித்தங் கிசைந்து பார்த்தார், நமுதாமறுசிலே கொடூரமான நாவின் வாள் வைத்துத்தானிருக்கக், குமுரியிருக்குமொவ் வாளைக்கண்டு கோமா னபியுல்லா திடுக்கமுற்றார். (190)

அரியபெரியோனே யிந்தவாளா லதாபுசெய்வாயோ வென்னும் மத்தைப், பெரியநாயனே யெனக்குமெத்தப் பெருத்த பயமாக விருக்குதென்றார், உரியநாயக னுரைத்திடுவா னுண்மைமுஹம் மதே நுமதுதீனின், கரியகுபிர் பாவஞ் சகலவற்றின் கருவையறுக் கின்ற வாளிதென்றான். (191)

வெண்பா.

அன்பார் முஹம்மதரையா தரித்தே பேசுனிலு, மின்பமுடனென்னை நீர் கண்டீரே முன்பாக, உன்னொளிவை யான்கண்டே னுவமை யொன்றுங் காணுமல், தென்னகத்திலே யுவந்தே னிசைந்து. (192)

தோங்கல்.

இசைந்து காயலும் நபியை நோக்கி யாமுஹம்மதே யுமக்கு திப்பில், விசைந்தநாட்டங்க ளுண்டானதையு வந்து கேளுமென் றிறையுரைக்க, வசந்தநாயனே யும்மத்தோர்க்கு மறைந்த பட்டோலைக்கேள்வி தன்னை, யிசைந்த வியாமத்து நாளையிலே யென்வசம் பண்ணித் தரவேண்டுமே. (193)

ஆனுல் நாமொரு ஆண்டவனும் அடியாரெனுமடையாளத்திற் குத், தீனிலழகிய முஹம்மதேனுஞ் சிறந்தவும்மத்தோ ரடங்கலை யும், நாளுக்கேள்வியுங் கேட்டு முன்னே நவிலுஞ் சுவர்க்கத்தி லனுப்பச் செய்து, போனபின் பலபடப்பை யெல்லாம் புகலுங் கேள்வியுங் கேட்பேனென்றே (194)

இந்தமொழி சொல்ல நல்லதென்றே யிறசூல் முஹம்மது பிரிசமாகி, யெந்தனும்மத்தின் பிழைகளெல்லா மேக பெரியோனே நீ பொறுத்து, வந்த முனிவையுமே கற்றி வரிசைக்கிருபையா முதலி செய்து, சிந்தை மகிழவே சுவர்க்கத்திலே சிறந்த பதவியுங் கொடுப்பாயென்முர். (195)

மோசவழியிலே சிறிதுபேரை முன்னுட்பாவங்கள் செய்த தினல், லேசமாற்றியே துனியாவிலே விடுத்தாய் முன்னமே பாருங் கண்டே, யேசி நகைக்கவே படைத்துவிட்டா யெந்தனும் மத்துக்கி யலாதினு, வாசம் பெருக வென்னுமத்தோர் மேல் வாழுந்துனியா விற் கிருபை செய்வாய். (196)

அல்லா பெரியவன் கிருபை செய்து ஆதிமுஹம்மதைத்தான் போற்றியே, எல்லா நபிகட்கு மேத்தமான வெனது மணியான முஹம்மதரே, பொல்லாக்குபிரர்களை யறுத்துத்தீனைப் புவியில் வளர்கின்ற முஸ்தபாவே, சொல்லாமமுதம்மே நடுவிளக்கே துய்ய முஹம்மதே யிருப்பீரென்முன். (197)

இருந்தபோதங்கோ ரொடுக்குவந்தே யிறங்கிற்றது முன்னம் பாலுஞ்சோறும், விருந்துதானுண்ணச் சொன்னுன் அல்லா விரும்பித்தனியே தானுண்ணேனென்முர், பரிந்துதானொரு கையும் வந்து பாலுஞ் சோற்றிலே தானுமுன்னச், சிறந்த பிசுமிலைக் கூறிக்கொண்டு சேர்ந்து பருகினுர் நபியுல்லாவும். (198)

அமுத முண்ணச்சே கணையாழியு மணிந்து காத்திலே யிருக் கக்கண்டு, குமுதமாகியயே சுடச்சோறள்ளிக் குளிர்ந்த காத்திலே

தானும் வைத்தார், திமிர்ந்தமாகிய சூடுகண்டு செங்கை மறைந்தது
சீக்கிரத்தில் அமுத நபியந்தப் புதுமை கண்டேயாதி பெரியோனைப்
புகழ்ந்தனரே. (199)

எல்லாப் புகழ்ச்சியு முனக்கே யென்றங் கேகன் குளிர்ந்து
தான் திரும்பும்போது, வல்லோன் சத்தமொன் றுண்டானது
வரிசை முஹம்மதே திரும்பாததையும், நல்லவொருசெய லும்மத்
தோர்க்கு நடக்கத் தருகிறேன் கேளுமென்றான், சொல்லுமொழி
கேட்டு நாயனே நீ துய்யசெயலினை யருளுவாயே. (200)

தொழுகை நாளிற்கைம்பது நேரமும் தொகுத்து நோன்பாறு
மாதம் வைக்க, நழுவாசக்காத்து நாலிலொன்று நாடி வருடத்துக்
கொரு அச்சுதான், பழுது வாராம லும்மத்தோரைப் பாங்காயிது
வெல்லாஞ் செய்யச்சொலிலும், முழுதும் நபியுல்லா நல்லதென்று
மூசா நபிக்கு வந்துரைக்கலுற்றார். (201)

மூசாநபி சொன்னார் முஹம்மதரே முடுகிப்போயின்னு
மன்றாடு நீர், நேசமிது செய்யமாட்டா ரென்றே நெடியோனிடத்திற்
போய் மன்றாடினார், வாசம் பெருகிய முஹம்மதரே வகையாலொரு
பத்தைக் குறைத்தே னென்றான், ஓசையுடன் வந்து மூசாநபிக்
குவந்தே யிவ்வுரை பக[illegible]லுற்றார். (202)

அருளநபி மூசா விறையிடத்தில் அகும்தேயின்னுச் குறையு
மென்றார், சரகிணபியேகி யிறையிடத்திற் றக்க பெரியோனே
யேலாதென்னப், பொருளா நாயகன் நாற்பதினைப் போக்கி யிரு
பதைத் தள்ளிச் சொன்னேன், தரளநபியுல்லா நல்லதென்று
தகைமை மூசாவுக்குக்கருளும்போது. (203)

அண்ணலறிவுறை மூசாநபி அஹ்மதே நீர்மன்றாடு மென்றார்,
எண்ணு முஹம்மது நபியுல்லாவு மிறையோனிடமினிச் செல்லே
னெனத், தண்ணிலிறை முன்னர் திரும்பிப்போக ஹபாலாயிருக்கு
தென்றுரைத்தபோது, நண்ணியொருசத்த முஹம்மதரே நாணிநீ
ரென்று நினைக்க வேண்டாம். (204)

என்றுமொரு நாளைக் கைந்துநேர மிலங்கித்தொழுது கொண்
டதபுடனே, நன்றாய் கபிர்செய்து சக்காத்தையும் நாற்பதுக்
கொன்று நானளித்துச், சென்ற வருடத்தில் றமூலானிலே தீர
வொருமாதம் நோன்பு வைத்து, நன்றாய் வயதிலே யொருஹச்சு
தான் நடந்து செய்திடப் போதுமென்றான். (205)

அந்தமொழியினைக் கேட்டுநபி யகங்குளிர்ந்து மெய் உடல்
பூரித்தே, யிந்தபறுல்விதி பாக்கித்தந்த னென்று மனதினி லேற்றுக்
கொண்டே, யெந்தனிருதயங் தனிலுவந்தே னெனவே நபிமூசாவ
தனைக்கேட்டு, வந்தகடனிதை நிறைவேற்றுவீர் வரிசை முஹம்
மதே யெனவுரைத்தார். (206)

கத்தனிடத்திலே வசனம்பேசிக் காபகபுசையினிடமறிந்தே, சுத்தங்கமுள்ள திருவைக்கண்டு சுபுஹான திருமொழி தனையறிந்து, பத்தா முஹம்மதைரிரை திருமுன் பலவாறு பேசி கைமகிழ்ந்தே வித்தாயுதிர்த நங்நபி யிறசூல் வேதாம்பர் நபி திரும்பலுற்றார்.(207)

திரும்பித்திரையெல்லாம் வானமெல்லாம் சென்றதலமெல்லாங் கசந்துமீண்டு, விரும்புஞ்ஜிபுரியீல் வந்துசேர்ந்தார் மீண்டங்கிரு பேரும் வழிநடந்தே, யரும்புதெரியாத நடுச்சாமத்தி லவனிதனில் வந்தங்திறங்கும்போது, எறும்புதனக்கெல்லாம் வேந்தனுகி யிலங்கு முத்துகா தனையுங்கண்டார். (208)

கண்டுகளிகூர்ந்து சலாமுஞ்சொல்லிக் காதலுடனப்பால் நடக்கும்போது, நின்றுநிறுத்திய கடல்கடந்தே நெருங்கிப்பைத்துல் முகத்திசிலே, சென்றுமுன்கட்டுப் புறுக்கானதைச் சிறக்கப்பிடித்துமே லேறிக்கொண்டு, நன்றாய் வருகச்சே யடிக்கோரடி நானூறு காதம் தொலேந்ததுவே. (209)

திக்குத்திசையெல்லாங் கடந்தபின்பு சிறந்தநபியுல்லா மதியம் போல், மக்கந்தனில்வந்து கஃபாவிலே வானின் ஜிபுரியீ லுடனிருந்தார், திக்குஞுேதியே மோதின்பிலால் சிறந்தபஜிறுக்கு பாங்கு சொன்னர், அக்கணமசுஹாநபி மார்களங்ஙன் தொழுதிடக் கூடினரே.

வாங்குதனேச்சொல்ல யார்களுடன் வந்தார்நாற்பத் தீராயிரரும், நான்குதிசையுள்ளோர் தானும்வந்து நபியுல்லாமூனம் பிலல்காமத்துப், பாங்காய்க்கூறிட நபியுல்லாவும் பஜிறு தொழுவித்தார் முடிந்த பின்பு, பூங்காவனமுள்ள சுவர்க்கம்போலே பொருந்தநிலேயுள்ள மிஃறுபிலே. (211)

நேராயிருந்தங்கே பிசுமிலோதி நிரைந்தபாத்திஹா குல்குமோதி, ஆராய்ந்தபூபக்கரு மறுகத்தா பரிவ்வுதுமானுரலியாருடன், போர சனுனதன் அசுஹாபிகளும் பேணிவிரைந்துதானுமீன் கூறி, நூருயொளிவதா யிலங்கிடவே நூறுநபியுல்லா வெடுத்தோதினர். ()

ஆதியிடத்திலே மிஃறுஜுக்கு அன்பாயின்றிராவிற் போய் வந்தேன், தூதர்ஜிபுரியீல் வந்தழைத்தார் சோபணம்பெற்று வந்தேனென்னப், பாதியிரவினில் எழுவானமும் படைத்தோ னறுசேறி மீண்டு வந்தேனென், ஞேதியிவையெல்லாங் காட்டும்போதே யுண்மையெனச்சொல்லி யுவந்துகொண்டார். (213)

உண்மையபியாருங் கனியாழியை யுவந்துநபியுல்லா திருமுன் வைத்தார், வண்மை நபியுல்லா மிஃறுஜைத்தான் வரிசைக்கிருபையாயுரைக்கும்போது, திண்மையாகவே யொருஞதன்றுன் நிருட்டு மனதிலே ஹசகைபெண்ணிப், புன்மைநபிக்கிந்தப் பொய்யேனென்றுபுலம்பி நினைத்தவன் வீட்டிற்போனுன். (214)

மச்சந்தனைவாங்கி மடவாள்கிட்டே வருத்தியாக்கொன்று கொடுத்துவிட்டே, யெச்சிலெண்ணெய் தேய்த்திட வேண்டு மென்றே யிடுப்பிற் குழந்தையுங் குடமுந்தூக்கி, வைத்துக்கரை யினி நின்று கொண்டுவாரிதனிவன் மூழ்கும்போது, துச்சன வனைக்கீ ழாறுகொண்டு தூரத்துறையிலே கரையேறினான். (215)

வெண்பா.

ஆண்வடிவ மாயிருந்தே யடவுகெட்ட சூதனவன்
பூணுமங்கை ரூபமாய்ப் போயினான்—நாணமுடன்
கானகத்தி லேயிருந்து கண்கலங்கித் தானழுதே
யூனகத்தைப் பார்த்திருந்தா னுற்று. (216)

தோங்கல்.

வாசம்பெருகிய ராசன்மகன் வந்தான் வனத்திலே வேட்டை யாடக், கூசியொருமங்கை யிருக்கக்கண்டு கூறியவளுட னீயாரென், றூன்பேசுமவளந்த வேந்தனுடன் பிரத்தி யாதொன்றுஞ் சொன்னா னில்லை, வீசுசிவிகையி லேற்றிக்கொண்டு வேந்தனரண்மனை வீடுபுக்கான். (217)

இராஜன்மகன்பெண்ணைக் கொண்டுவர ராஜனவன் தன்னை நோக்கிக்கேட்டான், தேசமுனக்கெது தந்தைதாய்பேர் செப்புமி னத்தார்களுனக்காரெனப், போஜனுரைத்திடக்கோதை சொல்வாள் பூவிலெனக்கொரு வினமுமில்லைக், காசுபணமில்லைக் கணவனில்லை யென்றேமங்கைதான் கழறினனே. (218)

இந்தமொழிசொல்ல வேந்தன்சொல்வா னென்றன் மகனுக் குப்பாரியாகச், சிந்தைபொருத்தமா யிருக்குமானாற் சிறந்தகலியாண முடிப்பேனென, விந்தையுடனகோதை நல்லதுயான் மெய்ப்பாய்ப் பொருந்தினேனெனவுரைத்தாள், சுந்தரவேந்தன் மனமகிழ்ந்து கோதைதனைமண முடிக்கவேண்டி. (219)

தெருவீதியெல்லாம் பந்தரிட்டுச் சேர்ந்தநகரோர்க்கு விருந்து செய்து, புரிவாய் விரிந்தண்டு வேந்தரெல்லாம் போதமாகவே தான்கூடியே, பரிவாயலங்காரஞ் செய்துநல்ல பண்பாக வேயூர் கோலஞ்செய்து, வருமாப்பிள்ளையும் பெண்ணையுந்தான் மணர்துடன் மணம் புரிந்தனரே. (220)

மணமாயிருபேரு மகிழ்ந்திருந்து வருஷமேழுந்தான் கூடிச் சேர்ந்து, கணவன் றனக்கேழு பிள்ளைபெற்றுக் காதலிளமங்கை யிருக்கும்நாளிற், றுணையாகியதோழி யுடன்கூடியே சூழ்ந்தநதி களிற் குளிக்கநாடிக், குணமாய்ப் போயங்ஙன் முழுகும்போது கூறுங்கீழாறு கொடு போயதே. (221)

கொண்டுபோயது தன்சீமையில் குளித்துமுழுகியே கரையேறினன், பண்டுபோலங்ஙன் ஆண் பிள்ளையாய்ப் பதறியெழுந்தவன் பார்க்கும்போது, அன்றுகரையிலே வைத்தபிள்ளை யருகுடமுந்தானிருக்கக்கண்டு, சென்றுகரத்தினிற் குடமுந்தூக்கிச் செல்வமகனையுமிடுக்கிக்கொண்டே. (222)

பதறிநடந்தவன் வீட்டிற்குப் பழைய மனையாளைப் பகரலுற்றான், குதறிமீனவ ளாய்ந்துகொண்டு குறித்தேயிருக்கிற கோலங்கண்டு. கதறியுனக்சிந்த மீனுமவும் கருதும் வெகுநாளாய்த் தொலையவில்லை, சிதறியான்சென்று வருஷமேழாய்த் தேவி மீனுக் கவில்லையென்றான். (223)

கோதையவள்மெத்தப் புதுமையாகிக் கொடுத்தே நீரிப்போ போனீரென்றாள். ஆதனைதைக்கேட்டு மனதுக்குள்ளே துய்யநபியுல்லாசொன்ன சொல்லை, வாதைப்படுத்தியே பொய்யென்றெண்ணி மனதில் நினைத்தால் தம்மைநாயன், பேதைப்படுத்தினனுடி நேரத்திற் பெரியவருத்ததைக் காட்டிவைத்தான். (224)

மனதில்நினைந்தச் சூசனுனேன் வரிசைமனையாட்டி தனையுங்கூட்டித், தனதுதாய்தந்தை சேயுடனே சகலவினத்தார்க்க டமையுங்கூட்டி, யினிதாய்ச்சம் மதித்துட னே தானுமிறசூல் முஹம்மதுதிருமுன்வந்து, கனத்த தவமுள்ள பதம்பணிந்து கருணையுடனங்கனிற்றனனே. (225)

நட்பாம்நபிக ளுயகமாம் நபிநலஞ்சேர் மிகுறாஜைத் தானுேதினர், மெய்ப்பாம்யார்களு முண்மைகொண்டு மேவியிருக்கும்போதிவனுரைத்தான், ஒப்பாம் முஹம்மதே நபிக்கரசே யுமதுமொழியையான்பொய் யென்றெண்ணிச், செப்புமனதிலே நினைத்ததனுற் றீங்குநான்பட்ட புதுமைகேளீர். (226)

ஆறுதனிலேயான் மூழ்கப்போனே னங்ஙன் பெண்பிள்ளைவடிவாகினன், வாழுமரசன்சே யொருவனென்னை மணம்புரிந்தவன் வைத்திருந்தான், நாளுமவளிட கிசுமத்திவல நாடிநலமுட னிருந்தவற்கு, ஏழுகுழந்தையும் பெற்றேனென்ற இறசூல்முஹம்மதற் குரைத்துச் சொன்னான். (227)

துய்யமுஹம்மதே முஸ்தபாவே தோன்றுங்கடந் தீனில்வந்தேன், பொய்யுங்கசதையு மகற்றிவிட்டுப் புறுக்கான் வழியினிலாக்கு மென்றான், மெய்யா முஹம்மது நபியுல்லாவு மேவுங்கலிமாவைப் புகட்டினரே, செய்யுந்தவப்பேறு மீமான் கொண்டு தீன்தீன் முஹம்மதைக் கொண்டாடினர். (228)

கோமாநபியுல்லா திருக்காட்சியாய்க் கூறிடுநல்ல செய்திதன்னை ஆமாயதைக்கேட்டு யார்களோடு மசுஹாபிகளு மெய்யென்று

மனஞ், சிமாகபிபேரிற் பிரிசமாகிச் சேர்ந்த நகரினிலுள்ளோர்களும் நாம்மிதைக்கேட்ட பேர்களுமே நன்மை முஹம்மது தீனில் வந்தார். (229)

தீனிலகத்துட னஹ்மதாகித்தீனின் முஹம்மது திருவுருவாய், வானமதிற்பென்றே குதாயுடனே வசனம்பேசிய மணிவிளக்காய், பாணிலொளிவதாய் வந்தநபி பயகாம்பர்சொன்ன மிஃறாஜதை, யீனமணுகாமல் சிந்தைக்குள்ளே யிசைந்து வைப்பீர்களும்மத்தோரே. (230)

இந்தமிஃறாஜு நாமந்தன்னை யாதோரடியானும் படித்தானுமாம்சிந்தை மகிழ்ச்சியாய்க் கேட்டானுமாம் செப்பும்படிக்கிதை யுவந்தானுமாம், அந்த மஜ்லிசி யிருந்தானுமா மறியுஞ்செவிதனிற் கேட்டானுமாம், வந்தக்கலியெல்லா மகன்றுபோகும் வல்லபெரியோனு முதவிசெய்வான். (231)

நல்லமிஃறாஜு நாமாவினினவிலுமொழிதனைக் கேட்டவர்கள், வல்லநபியுல்லா ஷபா அத்தென்னு மன்றூட்டம்பெற்றே யெந்தநாளுந், தொல்லைக்கலியெல்லாந் தொலைந்து நீங்கள் சுவர்க்கபதவிகள் மிகவும்பெற்றே, யெல்லாம் படைத்தவன் கிருபையினு லிலங்குந்தறஜாத்தும் பெறுவீர்களே. (232)

அறியமிஃறாஜுநா மாத்தன்னை யறிந்துமறியாமற்கூறினதைப், பெரியோர் பிழைகண்டீ ராளுற்பிழை திருத்திபே கொண்டு நீங்கள், பெரியோர்னிடத்தினு லடியேனுக்குப் பேணித்துவாச்செய்து மனுவுங்கேட்பீர், உரியமூமீன்கள் முஸ்லீம்களே யுவந்து நிதநீங்கள் வாழியவே, (233)

இருபத்துப்பத்து, முப்பத்தினு விதமாய்க்கவி செய்தா ரியல்கடலில், மருவுந்திருமாலே யுறைமார்பினர் வள்ளலினு மீறூன் முஹியித்தீன்சொற், றருபுத்திரனுக இனியமறை சகலகலையெல்லா மறிந்துணர்ந்த குருவித்தெனவந்த மதாறுசாஹிப் கூறுமிஃறாஜு நாமாவாழி. (234)

ஆமீன் ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

மிஃறாஜு நாமா

முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras 5.

மஜ்மூஉல் ஸலவாத்து

இப்புத்தகம் அல்லாஹுத் தஆலாவின் அம்மாவுல் ஹு... வைப் பொதிந்த (அஞ்ச கஞ்சுல் அர்சும்) இன்னும் நம்மு... நாயகம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை... எப்போதும் சேமமாய் ஓதிவருகிற ஸலவாத்துகளில் மிகவும் பு... தாகவும் மற்றும் ஸலவாத்துகளுக்கெல்லாம் தாயானதாக... (உம்முல் ஸலவாத்தும்) இன்னும் அல்குத்துபுர் றப்பானீ கௌதுல் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலா... றலியல்லாஹு அன்ஹு அவர்கள்பேரில் ஓதப்பட்ட (கௌதிய்ய... ஸலவாத்தும்) இன்னும் ஷைகிஹு குதுபுல் அக்தாபு ... அஹ்பாபு ஜிந்தா ஷாஹ்மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு... அவர்கள்பேரில் ஓதப்பட்ட (மதாரிய்யா ஸலவாத்தும்) இன்... அநேக சில்லறை ஸலவாத்துகளும் துஆக்களும் சேகரித்து (ம... உல் ஸலவாத்து) என்னும் நாமமிட்டு சுத்தத் தமிழால் சிறிய... பாக்கெட் புத்தகம்போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சி... பட்டு கலிக்கோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 15. அறபுத் தமிழ் விலை அணா

தாரீகுல் குலபா.

அரபியாவில் தோன்றிய முஸ்லிம் கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்.

1-வது பாகம்.

நமது முஸ்லிம் கலீபாக்களின் சரித்திர விஷயங்க... தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அ... யாவசியமாகும். ஏனெனில் அச்சரித்திரங்களில் இஸ்லாமி... ஆரம்பமும் இஸ்லாத்தை நிலைநாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும் இஸ்லாத்தின் சமத்துவங்க... லாத்தின் நீதி பரிபாலனங்களும், ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை முறையே எழுதி பல பாகங்களாக வகுத்து அச்சிடப்பட்டு வருகின்றன.

இதில் முதற்பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதற் கலீபாவாகிய ஹஜ்ரத் அபூபக்கரிஸ் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது சரியான கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 16-பேஜ் சைசில் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு கட்டியது.

இதன் விலை ரூ. 1 4 0.